# THIRUMARAI AASAAN

S. Rajanayagam
Editor

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.
PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385

Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 29 March 2016 Issue - 3


ஆசிரியர் உரை

# குளிர்காய்ந்து கொண்டிருந்தான்

**பொது**வாகப் பருவநிலையை அதன் தன்மைக்கேற்ப நான்கு வகைகளாகப் பிரித்திருக்கிறார்கள். அவைகளில் ஒன்று குளிரைக் கொண்டு வரும் மழைக்காலம். இந்தக் குளிர்காலம், பூமியில் உள்ள அனைத்துப் பகுதிகளிலும், அவை அமைந்திருக்கும் தட்பவெப்ப நிலைக்குத் தகுந்த வாறு ஏற்படும். சிலநாடுகளில் பல மாதங்களுக்கும், வேறு பல நாடுகளில் சில மாதங்களுக்கும் இந்தக் குளிர்காலம் நீடிக்கும். இக்காலத்தில், ஆங்காங்கே வாழும் மனிதன், குளிரின் பாதிப்பிலிருந்து தன் சரீரத்தை இதமாக்கிக்கொள்ள, அவன் வாழ நேர்ந்த பகுதிக்கேற்றவாறு பல வகையான உத்திகளை மேற்கொண்டு வந்திருக்கிறான். இப்படி மனி தனால் மேற்கொள்ளப்படும் முறைகளில் மிகவும் பழமையானதாக இருந்து, இன்றளவும் தொடர்கின்ற ஒரு வழக்கம், நெருப்புண்டாக்கிக் குளிர் காய்வது. ஒருவேளை, விஞ்ஞான யுகத்தின் அசுர வளர்ச்சி விண்ணை முட்டிவிட்டதென்று இந்நாட்களில் நாம் பெருமையடித்துக் கொண்டாலும், இப்பழைய முறை வழக்கத்திலிருந்து இன்னும் ஒழிந்து போகவில்லை. இன்றளவும், குளிர்காலங்களில் இம்முறையை நம்முடைய கிராமங்களிலும், ஏன் நகரங்களிலும் கூடக் காணமுடியும்.

ஒருவன் குளிரின் பாதிப்பிலிருந்து தன்னைப் பாதுகாத்துக்கொள்ள

நெருப்புண்டாக்கிக் குளிர்காய்வது எந்த வகையிலும் தவறானதல்ல. குளிர் காயும் ஒருவனை யாரும் பெரிதாகக் குறை சொல்லமாட்டார்கள். தன் சரீரத்தைப் பாதுகாத்துக் கொள்ள ஒருவன் செய்யும் முயற்சியைக் குறைசொல்வது நியாயமுமல்ல. இருப்பினும், புதிய ஏற்பாட்டிலுள்ள மத்தேயு தவிர ஏனைய நற்செய்தி நூல்களை நாம் கவனமாக வாசிக் கையில், பேதுரு குளிர்காய்ந்து கொண்டிருந்த சம்பவம் நம்மையும் அறியாமல் நமக்குள்ளாக லேசாக உதைக்கும். அதுவும், யோவான் நற்செய்தி நூலில், ஒரு ஏழு வசன இடைவெளியில், பேதுரு குளிர்காய்ந்து கொண்டிருந்தான் என்று இரண்டு முறை வரும் போது, பரிசுத்த ஆவியானவர் ஏன் இக்காரியத்தை இப்படி எடுத்துரைக்கிறார் என்ற கேள்வியையும் நமக்குள்ளாக அது எழுப்பும். அவன், அச்சமயத்தில் குளிர்காய்ந்து கொண்டிருந்தது நியாயமானதாக இருந்திருந்தால், வேதாகமம் இப்படிப் பேசத் தேவையில்லையே என்று எண்ணவும் தோன் றும். வேத வசனம் ஒன்றையும் ஒருபோதும் தவறாகவோ அல்லது மிகைப்படுத்தியோ சொல்லாதாதலால், இப்படிச் சொல்லியிருப்பதற்கு ஏதாவது ஒரு சிறப்புக் காரணம் இருக்குமோ என்று சிந்திக்கத் தூண்டுகிறது.

இப்படிச் சிந்தித்ததின் விளைவுதான் இம்மாதத்திற்கான தலைப்பு. பேதுரு குளிர் காய்ந்த நெருப்பண்டை நாம் போகும்போது, அச்சூட்டில் நமக்குப் பயன்படும் சில பாடங்கள் கிடைக்கும் போல்தான் தெரிகிறது. ஆகவே, நாம் கிட்டப்போய் நம்மைச் சுட்டுக் கொள்ளாமல் சில பாடங்களைக் கற்றுக் கொள்ள முயற்சிப்போமா?

அதற்கு முன்பாக, நமது வழக்கத்தின்படியாக, இச்சம்பவத்திற்கான பின்னணி பற்றிக் கொஞ்சம் பார்த்து விடுவோம்.

பேதுரு குளிர் காய்ந்து கொண்டிருந்த சம்பவம், இயேசுவின் ஊழியம் விமரிசையாக நடந்த நாட்களில் நிகழ்ந்த ஒரு சம்பவம் அல்ல. மாறாக, அவருடைய பூமிக்குண்டான ஊழிய நாட்கள் முடிவுறும் நேரம் நெருங்கி, வேதவாக்கியங்கள் அவரைப்பற்றி முன்னுரைத்த காரியங்கள் நிறை வேறும் வேளை வந்தபோது நடந்த ஒன்று. ஆம், அதற்கு சற்று முன்பாக, நம்முடைய ஆண்டவர், தான் தெரிந்து கொண்ட சீடர்களோடு கெதரோன் ஆற்றுக்கு அப்புறமுள்ள கெத்சமனே தோட்டம் சென்றார் (யோவா. 18:1) அப்பொழுது அவரை, ஒரு திருடனைப் பிடிப்பது போல பிடிக்க வந்த போர்ச் சேவகர்களோடும் மற்றும் பிரதான ஆசாரியர், பரிசேயர் என்பவர்களால் அனுப்பப்பட்ட ஊழியர்களோடும் பதுங்கி வந்த கயவன் யூதாஸ், எந்த வொரு பந்தபாசத்திற்கும் அப்பாற்பட்டதொரு முத்தத்தால் இயேசுவைக் காட்டிக் கொடுத்தான் (யோவா. 18:3, மத். 26:49). இப்படிப்பட்ட ஒரு

முத்தம் உலக வரலாற்றில் ஒருபோதும் இடப்பட்டதில்லை. இனி இடப்படப்போவதுமில்லை!

சரி, அங்கே, ஒரு சுவாரசியமான உரையாடலுக்குப் பிறகும், ஓர் எக்கச் சக்கமான சம்பவத்திற்குப் பிறகும் இயேசு பிடிக்கப்பட்டு (18:3-10) கட்டப்பட்ட நிலையில், யூத மார்க்கத்தின்படியான முதல் விசாரணைக்காக, அவ்வரு டத்துப் பிரதான ஆசாரியனாகிய காய்பாவின் மாமனான அன்னாவுக்கு முன்பாகக் கொண்டு போகப்பட்டார். (18 : 12 - 23). பிறகு, அந்தக் கட்டு அவிழ்க்கப்படாத நிலையில், இரண்டாவது விசாரணைக்காகக் காய் பாவுக்கு முன்பாக கொண்டு போகப்பட்டார் ( 24 - 27 ). அதன்பிறகு, ஆட்சியும், அதிகாரமும் கையிலிருந்தும், கையாலாகாத மனிதனாகக் காணப்பட்ட பிலாத்துவுக்கு முன்பாக, ரோமச்சட்டத்தின்படி விசாரிக்கப் படுவதற்கு இரண்டு முறை கொண்டு போகப்பட்டார் (18 : 28 - 38, 39 -40). கட்டப்பட்ட நிலையில், அதாவது, யூதச்சட்டப்படி விசாரிக்கப்படுவதற்காக ஆரம்பத்தில் கொண்டு போகப்பட்டார் அல்லவா அப்பொழுது தான் நடந்துள்ளது. (18 : 18, 25) நம்ம பேதுரு குளிர் காய்ந்த சம்பவம்.

நான் ஏற்கனவே சொன்னது போல குளிர்காய்வது ஒன்றும் தவறல்ல. ஆனால், இயேசுவால் தெரிந்து கொள்ளப்பட்டு, சிறப்பாகப் போதிக்கப்பட்டு, அவருடைய சீடர்களில் துடுக்கானவர் என்ற அங்கீகாரம் பெற்ற இந்த பேதுரு, எந்தச் சூழ்நிலையில் குளிர்காய்ந்து கொண்டிருந்தான் என்பதே மிகவும் கவனிக்கத்தக்கது. ஆம், இயேசு காட்டிக் கொடுக்கப்பட்டு நியாயம் என்ற பெயரில் அவர் அநியாயமாய் விசாரிக்கப்பட்ட நிலையில், அரண் மனைக்குள்ளே காரியங்கள் காரசாரமாக நடந்து கொண்டிருக்கும் போது, தான் என்ன செய்கிறோம் என்பது தெரியாமல், தான் என்ன செய்ய வேண்டுமென்பதும் புரியாமல், குளிர்காய்ந்து கொண்டிருந்துள்ளான். அச்சமயத்தில் பேதுரு, இயேசுவைக் குற்றம் சாட்டினவர்கள் பக்கமாகவும் நிற்கவில்லை, முற்றிலும் இயேசுவுக்கு ஆதாரவான நிலை எடுத்து அவருக்குப் பக்கபலமாகவும்இருக்கவில்லை என்றே தெரிகிறது.

ஒரு முக்கியமான கட்டத்தில், எந்த முடிவும் எடுக்கத் திராணியற்ற வனாய் காணப்பட்டுக் **குளிர்காய்ந்து கொண்டிருக்கும்படியாகவா இயேசு இவனைக் கலிலேயாக் கடலோரத்தில் அழைத்தார்?** (மத். 4:18) செயல்பட வேண்டிய நேரத்தில் செயல்படாமல், குளிர் காய்ந்து கொண்டிருக்கும் படியாகவா, **உங்களை மனுஷரைப் பிடிக்கிறவர்களாக்குவேன்** (மத். 4:19) என்று சொன்னார். தான் யாரென்பதை சாதுரியமாக மறைத்துக்கொண்டு, குளிர்காய்ந்து கொண்டிருக்கும்படியாகவா **யோனாவின் குமாரனாகிய**

**சீமோனே நீ பாக்கியவான்** (மத். 16 : 17) என்று இயேசு ஆசீர்வதித்தார். சோதனையான நேரத்தில், பிதுபிது என்று முழித்துக் குளிர்காயும்படியாகவா மூன்று ஆண்டுகள் பயிற்சி தந்தார்? சொல்லுங்கள். நிச்சயமாக இல்லை, இல்லவே இல்லை.

ஆயினும், இந்தத் துடுக்கு ஆசாமி, இயேசு விசாரிக்கப்பட்டபோது. தன் பொறுப்பைத் தட்டிக் கழித்தவனாக நிர்க்கதியாய்க் காட்சிதந்து, இவன் செயலைப் பரிசுத்த ஆவியானவர், ஒரு ஏழு வசன இடைவெளியில், இரண்டு முறை நாசூக்காகக் குத்திக்காட்டும்படி நடந்து கொண்டான். இவன் அங்கே செய்தது நியாயமாக இருந்திருக்குமானால், கண்டிப்பாக சத்திய ஆவியானவர் இப்படிக் கோடிட்டுக் காட்டியிருக்கமாட்டார் என்று நம்பும் படியாகத்தானே உள்ளது. அப்படித்தானே! சரி, பேதுரு குளிர்காய்ந்து கொண்டிருந்தான் என்பதிலிருந்து நமக்குக் கிடைக்கும் பாடங்கள் என்னவென்று இப்பொழுது பார்த்துப் பயனடைவோம்.

### I முடிவெடுக்க முடியாத இடத்தில் நின்றான்

பேதுரு குளிர்காய்ந்து கொண்டிருந்தான் என்பதிலிருந்து நமக்குக் கிடைக்கும் முதல் பாடம், அவன் முடிவெடுக்க முடியாத ஓர் இடத்தில் நின்றான் என்பது.

முடிவெடுக்க முடியாததைக் காட்டிலும் ஒரு பெலவீனமான நிலை மனிதனுக்கு வேறெதுவும் கிடையாதென்று உளவியல் நிபுணர்கள் கூறுகிறார்கள். அவர்கள் கூறுவது ஒருபுறம் இருக்கட்டும். இதைப்படிக்கும் போது, நமக்கே, ஏன் இந்தப் பேதுரு இப்படிச் செயல்பட்டான் என்று தானே எண்ணத் தூண்டுகிறது. அதுவும் தன்னால் நேசிக்கப்பட்ட ஒருவர், ஆபத்தான சூழ்நிலையில் இருக்கும்போது, அவருக்கு அடுத்து என்ன நடக்குமோ என்பது இவனைப் பொறுத்தளவில் மர்மமாக இருக்கும் போது, பேதுருவால் எப்படி இதுபோல் இருக்க முடிந்தது? அதுவும், இவன் குருவாகிய இயேசு, **என்னோடிராதவன் எனக்கு விரோதியாயிருக்கிறான்; என்னோடே சேர்க்காதவன் சிதறடிக்கிறான்** (மத். 12:30) என்று உபதேசித்திருப்பதைக் கிட்ட இருந்து கேட்டிருந்தும் எப்படி இப்படியிருக்க முடிந்தது?

பரலோகத்தின் தேவன், அவரை நேசிக்கின்ற பிள்ளைகள் முடிவெடுக்கும் திராணி உள்ளவர்களாகவும், செயல்பட வேண்டிய நேரத்தில் செயல்படுகிறவர்களாகவும் இருக்க வேண்டுமென்றே விரும்புகிறார். தலைமைத்துவப் பண்பில், மோசேயைக் காட்டிலும் சிறந்தவனென்று தேவதாசர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கும் யோசுவா, ஒரு கட்டத்தில், முடிவெடுக்க வேண்டிய நேரம் வந்தபோது முடிவு எடுங்கள் என இஸ்ரவேலர்

களை நெருக்கினான் (யோசு. 24:15). இன்னும், பழைய ஏற்பாட்டின் சீரிய கதாபாத்திரமான மோசே, சரியான முடிவெடுத்து செயல்பட்டதை பரிசுத்த ஆவியானவர் எபிரெயர் ஆசிரியரைக் கொண்டு சொல்லும்போது, விசுவாசத்தினாலே மோசே தான் பெரியவனான போது பார்வோனுடைய குமாரத்தியின் மகன் என்னப்படுவதை வெறுத்து, அநித்தியமான பாவ சந்தோஷங்களை அனுபவிப்பதைப் பார்க்கிலும் தேவனுடைய ஜனங்க ளோடே துன்பத்தை அனுபவிப்பதையே தெரிந்து கொண்டான் (எபி. 11 : 24, 25) என்று மெச்சியிருக்கிறார். இன்னும் புதிய ஏற்பாடு, அப்போஸ்தலன் பவுலைக் குறித்து சொல்வதையும் கவனியுங்கள். அவன் தனக்கு லாபமா யிருந்த எவைகளையெல்லாம் கிறிஸ்துவுக்காக நஷ்டமென்று எண்ணு மளவு ஒரு முடிவுக்கு வந்துள்ளான் (பிலி. 3:11) என்றல்லவா கூறுகிறது.

அன்பானவர்களே, நாம் ஒவ்வொருவரும் மோசே போல, யோசுவா போல, இன்னும் அப்போஸ்தலன் பவுல் போல செயல்பட வேண்டுமென்று தேவன் எதிர்பார்க்கிறாரேயொழிய, மற்றபடி, நம்ம பேதுரு இங்கே செயல் பட்டது போலல்ல. தங்களுடைய வாழ்க்கையில் முடிவெடுக்க வேண்டிய நேரத்தில் முடிவெடுக்க முடியாமல் இழந்து போனவர்கள் நிறையப் பேர் உண்டு. அவர்களின் ஈன வரிசையில் நாம் யாரும் சேர்ந்துவிடக்கூடாது.

ஆம், மாற்கு நற்செய்தி நூலில், நல்ல போதகரே, நித்திய ஜீவனைச் சுதந்தரித்துக் கொள்ளும்படி நான் என்ன செய்ய வேண்டும் என்று கேட்டு ஓடி வந்த வாலிபன், நித்திய ஜீவனா? உலக செல்வமா? என்று முடிவெடுக்க முடியாததாலேயே துக்கத்தோடு திரும்பிப் போனான். (மாற். 10:17-22). மகிழ்ச்சியை தானமாகத் தந்த இயேசுவிடம் வந்து துக்கத்தோடே திரும்பிப்போய், சரித்திரம் படைத்த ஒரே மனிதன் இவனாகத்தான் இருக்க முடியும். இவன் விரும்பிய நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்ள முடியாமல் போனதற்கான ஒரே காரணம், முடிவு எடுக்க நேரத்தில் முடிவு எடுக்க முடியாமல் இவன் தண்டாடியது தான்

இதை வாசிக்கும் அன்பரே, நாம் ஒவ்வொருவரும் எப்படிப்பட்டவர்க ளாய் உள்ளோம்?. தேவனுடைய காரியத்தில், இயேசுவுக்கடுத்த உபதேச காரியங்களில், பரத்துக்கடுத்த வாழ்க்கையில் சரியான முடிவு எடுக்கிறவர் களாக உள்ளோமா? அல்லது எலியா தீர்க்கன் காலத்து மக்கள் போல **இரண்டு நினைவுகளால்** இன்னும் குந்திக்குந்தி நடந்து கொண்டுள் ளோமா? (2ராஜா. 18:21) சிந்திப்போம். நாம் ஒவ்வொருவரும், நீதிக்கும், அநீதிக்கும் இடையில், சத்தியற்கும், அசத்தியத்திற்கும் இடையில், உபதே சத்திற்கும், கள்ள உபதேசத்திற்கும் இடையில், இயேசு வாக்களித்துக் காட்டின

ஒன்றான மெய்ச் சபைக்கும் (மத். 16:18), மனிதர்களால் கட்டப்பட்ட எண்ணிலடங்காத சபைகளுக்கும் இடையில் எது சரியென்று கண்டு முடிவெடுக்கக் கூடியவர்களாய் இருக்க வேண்டியது அவசியம்.

**II சௌகரியமான இடத்திலே நின்றான்**

பேதுரு குளிர்காய்ந்து கொண்டிருந்தான் என்பதிலிருந்து நமக்குக் கிடைக்கும் இரண்டாவது பாடம். அவன் தன்னுடைய சௌகரியமான இடத்திலே நின்றுள்ளான் என்பது.

அப்பொழுது, குளிர்காலமாயிருந்தபடியால் ஊழியக்காரரும், சேவகரும் கரி நெருப்புண்டாக்கி நின்று குளிர்காய்ந்து கொண்டிருந்தார்கள். அவர்களுடனே பேதுருவும் நின்று குளிர்காய்ந்து கொண்டிருந்தான். (யோவான். 18:18) என்று வசனம் கூறுகிறது. இவன் செயலை இங்கே நாம் பார்க்கும்போது, இப்படிச் செய்தது நியாயமா என்ற கேள்வியை எழுப்புகிறதாகவே உள்ளது. இயேசுவின் சூழ்நிலை குறித்து இவன் கவலைப்பட வேண்டிய அளவு கவலைப்பட்டதாக நமக்குத் தெரியவில்லை. நடப்பது நடக்கட்டும், நாம் நம்ம வேலையைப் பார்ப்போம் என்ற எண்ண ஓட்டம் மேலோங்கி இருந்துள்ளதாகவே தெரிகிறது.

இத்தனைக்கும் இந்த இயேசு, தேவனுக்குச் சமமான நிலையிலிருந்து, பாவ மனிதர்களை மீட்டெடுக்க இப்பூமிக்கு, தம்மைத் தாமே வெறுமையாக்கி அடிமையின் ரூபமெடுத்து வந்தார் என்பது பேதுருவுக்குத் தெரியும். (லூக். 5:32, யோவா. 16:28). ஒரு சமயம் பேதுரு உட்பட மற்ற சீடர்களிடம், நீங்கள் என்னை யாரென்று நினைக்கிறீர்கள் என்று கேட்டபோது, நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நெத்தியடியாய்ப் பதிலளித்தவனும் இவன்தான். (மத். 16:16). தனக்காக வாழாமல் பிறருக்காகவே வாழ்ந்து கொண்டிருக்கிறார் என்பதை மூன்று ஆண்டுகள் அருகிலிருந்து பார்த்த பேதுருவால், தன் சுகம் தான் முக்கியமென்று எப்படி எண்ண முடிந்தது? நம்ப முடியவில்லை. ஆயினும், வேறு வழியில்லை.

ஆனால், பழைய ஏற்பாட்டு மொர்தெகாயைப் பாருங்கள். இயேசுவின் தியாகத்தையும், அவரின் செயல்பாட்டையும் சற்றேனும் அறிந்து கொள்ளும் வாய்ப்பைப் பெறாதவன். ஆயினும், யூத ஜனத்துக்கு எதிராக ஆணை பிறப்பிக்கப்பட்டதென்று அறிந்தபோது, தன் வஸ்திரங்களைக் கிழித்து, இரட்டுடுத்தி, சாம்பல் போட்டுக்கொண்டு, நகரத்தின் நடுவே புறப்பட்டுப்போய், துயரமுள்ள மகாசத்தத்துடனே அலறிக்கொண்டு, ராஜாவின் அரமனை வாசல் முகப்பு மட்டும் வந்துள்ளான் (எஸ். 4:1). இத்தனைக்கும், எஸ்தர் ராஜாத்தியாயிருந்தபடியால், இவனுக்குத் தனிப்பட்ட முறையில்

அந்த ஆணையினால் ஆபத்து வந்திருக்காது. இருப்பினும் தன்னோடி ருப்பவர்களுக்காக இவன் அலறித் துடித்துள்ளான். இவன் இரட்டுடுத்தி, சாம்பல் போட்டுக் கொண்ட கோலத்தையும், பேதுரு வேலைக்காரர்களின் கூட்டத்தில் நின்று குளிர்காய்ந்ததையும் ஒப்பிட்டுப் பார்த்தால் குலையெல் லாம் நடுங்குகிறது. பேருது அங்கே தவறு செய்திருக்கிறான் என்பது அப்பட்டமாகவே தெரிகிறது.

அன்பானவர்களே, இயேசுவின் உண்மைச் சீடனாய் ஒருவன் இருக்க விரும்பினால், அவருக்காகப் பாடுகளை ஏற்றுக்கொள்ளுகிறவர்களாக இருக்க வேண்டுமேயொழிய, அவர் பெயரைச் சொல்லிக்கொண்டு சுகம் தேடுகிறவர்களாக இருக்கக்கூடாது. ஆனால், இன்றைய மார்க்க உலகின் யதார்த்த நிலை வேதனை தருவதாக உள்ளது. அப்போஸ்தலன் பவுல் தான் பெற்றெடுத்த விசுவாசக் குமாரனுக்கு எழுதும் போது, அவரோடே கூடப் பாடுகளைச் சகித்தோமானல், அவரோடகூட ஆளுகையும் செய் வோம் (2 தீமோ. 2:12) என்றே கூறுகிறார். அவர் நாமத்தினிமித்தம் பாடு படுகிறவர்களுக்கே நித்திய ஜீவன் என்று அவர் அழுத்தம் திருத்தமாகச் சொல்லியிருக்கிறார் (மத். 19:29). ஆனால், நாமோ போகிற போக்கில் எனக்கு நித்திய ஜீவன் வேண்டுமென்று அடம்பிடிக்கிறோம். இது எப்படி சாத்தியமாகும்?

ஆகவே, நாம் ஒவ்வொருவரும், நம்ம பேதுரு போல், என் சுகம் பெரி தென்று எண்ணி வாழாமல், அப்போஸ்தலன் பவுல் போல், கிறிஸ்துஎனக்கு ஜீவன் சாவு எனக்கு ஆதாயம் என்று சொல்லி ( பிலி. 1:21) கிறிஸ்துவுக்கா கவும், அவர் கட்டின ஒன்றான மெய்ச் சபைக்காகவும் (எபே. 4:4). கிறிஸ்து வின் உபதேசத்துக்காவும் ( 2 யோவா.9 ) வாழ்வோம். இறுதியில் நித்திய ஜீவனைப் பெறுவோம்.

### III **ஆபத்தான இடத்திலே நின்றான்**

பேதுரு குளிர்காய்ந்து கொண்டிருந்தான் என்பதிலிருந்து நமக்குக் கிடைக்கும் மூன்றாவது பாடம், ஆபத்தை வரவழைக்கக் கூடிய இடத்திலே அவன் நின்றான் என்பது.

அப்போஸ்தலன் பேதுரு பற்றி நாம் உயர்வாகப் பேசுவதற்கு பரிசுத்த வேதாகமத்தில் ஏராளமான காரணங்கள் உண்டு. தேவனால் வெகுவாகப் பயன்படுத்தப்பட்ட மிகச் சிலரில் இவனும் ஒருவன். யாருக்கும் இதிலே மாற்றுக் கருத்து இருக்க முடியாது. ஆயினும், இவன் இயேசுவை மறுதலித்த சம்பவம் இவனது நெடிய ஆன்மீகப் பயணத்தில் ஒரு சறுக்குப்

பாதையே. இவனைப் பற்றிப் பேசிப் பெருமைப்படுவதற்கு நிறைய இருந்தும், இச்சம்பவம் ஓர் அழகிய வெள்ளைச் சட்டையில் கறுப்பு புள்ளி போன்ற ஒன்றாகவே உள்ளது.

சேவல் கூவுகிறதற்கு முன்னே நீ என்னை மூன்று தரம் மறுதலிப்பாய் என்று பேதுருவிடம் சொன்னபோது, ஆண்டவரே, காவலிலும், சாவிலும் உம்மைப்பின் பற்றி வர ஆயத்தமாயிருக்கிறேன் என்று கூறி அவன் தம்பட்டம் அடித்த போது இயேசு சொன்னது உண்மையே. அவர் வார்த்தை கண்டிப்பாக நிறை வேறியே ஆக வேண்டும். அதில் சந்தேகமில்லை, ஆயினும், இவன் மூடன் நெடுகப் போய் தண்டிக்கப்படுவான் என்பது போல (நீதி. 22:3) வலியச் சென்று வம்பிலே மாட்டிக்கொண்டு மறுதலிக்கிறான். நமது தலைப்புக்கான வசனத்தைப் பாருங்கள். **சீமோன் பேதுரு நின்று குளிர் காய்ந்து கொண்டிருந்தான்; அப்பொழுது சிலர் அவனை நோக்கி; நீயும் அவனுடைய சீஷரில் ஒருவனல்லவா என்றார்கள். அவன்; நான் அல்ல என்று மறுதலித்தான்** (யோவா. 18:25).

இவன் ஏற்கனவே ஒரு முறை இயேசுவை மறுதலித்து விட்டான். இப்பொழுது இவன் நின்ற இடம் இவனை இன்னும் ஒருமுறையாகத் தவறி ழைக்கச் செய்கின்றது. ஆம், ஆகாத சம்பாஷணை நல்லொழுக்கங்களைக் கெடுக்கும் (1 கொரி. 15:33). இவன் சற்றும் எதிர்பாராத நேரத்தில் ஆபத்து வந்து சேர்கிறது. ஒருவேளை, இவன் அவர்களோடு சேர்ந்து குளிர்காயச் செல்லாமலிருந்தால் இதைத் தவிர்த்திருக்கலாமோ? அல்லது இயேசு வோடு கூட மற்ற சீஷனைப் போல் உள்ளே போயிருந்தாலோ (யோவா. 18 : 16) அல்லது அரண்மனையை விட்டு வெளியே போயிருந்தாலே இந்நிலையைத் தவிர்த்திருக்கலாமோ? யாருக்குத் தெரியும்.

ஒருவன் தன் ஆன்மீக வாழ்வில் ஆபத்து உள்ள இடத்திற்குப் போகாமலும், ஆபத்து வரும்வரை அங்கே தரித்திராமலும் இருப்பது மிகவும் நல்லது. இவ்வரிய பண்பு பக்தன் யோபுவிடம் இருந்ததாக சர்வ வல்ல தேவன் சாட்சியிடுகிறார். ஆம், அவர் சாத்தானிடத்தில் பேசின போது, யோபுவைப் பற்றி என்ன கூறுகிறார் என்று தயவு செய்து கவனியுங்கள். அப்பொழுது கர்த்தர் சாத்தானை நோக்கி; **நீ எந்த தாசனாகிய யோபின் மேல் கவனம் வைத்தாயோ? உத்தமனும், சன்மார்க்கனும், தேவனுக்குப் பயந்து பொல்லாப்புக்கு விலகுகிறவனுமான மனுஷனாகிய அவனைப் போல் பூமியில் ஒருவனுமில்லை; முகந்தரமில்லாமல் அவனை நீர்மூலமாக்கும்படி நீ என்னை ஏவினபோதிலும், அவன் தன் உத்தமத்திலே உறுதியாய் நிற்கிறான்** என்றார் (யோபு. 2 : 3). இந்த யோபு போல், பொல்லாப்பு

வருமென்று தெரியும் காரியங்களுக்குக் கட்டாயம் நம்மை விலக்கிக் காத்துக் கொள்ள வேண்டும். பேதுரு, இயேசுவோடிராமல் குளிர் காயச் சென்றது அவனுக்குப் பிரச்சினையைக் கொண்டு வந்ததென்பது கவனிக்க வேண்டிய ஒன்று.

அப்படியானால் அருமையானவர்களே, நம்முடைய ஆன்மீக வாழ்வில் நாம் எப்படிப்பட்ட இடத்தில் இருக்கிறோம்? நம்முடைய தனிப் பட்ட பக்தி வாழ்வில், தேவனை ஆராதிக்கும் சபை வாழ்வில்,தேவனுடைய வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிவதால் பெற்றுக்கொள்ளும்இரட்சிப்பின் வாழ்வில், பரலோகத்திற்குப் பாதை காட்டும் அன்றாடக் கிறிஸ்தவ வாழ்வில் நாம் எங்கே இருக்கிறோம்? சொல்லுங்கள்.

பேதுருவுக்கு அவன் நின்ற இடம் சுகத்தைக் கொடுத்தது போல, அநேகராகிய நமக்கும், நம்முடைய ஆன்மீக வாழ்வில் நாம் இருக்கும் இடம் பலவிதமான சுகங்களைக் கொடுக்கக் கூடியதாய் இருக்கலாம். ஆராதனைக்குப் போகப் பக்கமாக இருக்கிறதென்ற சுகம், பெரிய கட்டிடம்என்ற சுகம், போதனையில் கண்டிப்பில்லை என்ற சுகம், கூட்டம் நிறைய வருகிறது என்ற சுகம், பாரம்பரியம் என்ற சுகம், பண்டிகைக் கொண்டாட்டம் என்ற சுகம், எனக்குப் பிடித்தமான, ஊறறிந்த ஊழியர் என்ற சுகம், எனக்கு மரியாதை கிடைக்கிறது என்ற சுகம், சமுதாய மக்களோடு இருக்கிறோம் என்ற சுகம் என்று இப்படி பல சுகங்கள் கிடைக்கலாம்.

ஆனால், சுகம் வேண்டிக் குளிர்காய்ந்து கொண்டிருந்த பேதுருவுக்கு, எதிர்பாராத நிலையில் ஆபத்து வந்ததுபோல, நமக்கும் நாம் இயேசுவோடு கொண்டிருக்கும் உறவுக்கு சடிதியாய் ஆபத்து வரும். ஆகவே, நாம் நிற்கும் இடம் சரியானதா என்று உறுதி செய்து கொள்வது அவசியம். எல்லா வற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதைப் பிடித்துக் கொள்ள வேண்டும் (1தெச. 5 : 21). குறிப்பாக, பரலோகம் பாக்கியம் இயேசு கட்டின (மத். 16:18) ஒரு சபைக்குள்ளாக ( எப. 4:4 ) இருப்பவர்களுக்குத்தான் என்று (1 கொரி. 15:25) வேதவசனங்கள் தெளிவாகச் சொல்லுகிறபடியால், நான் கிறிஸ்து காட்டின ஒன்றான மெய்ச்சபையில் இருக்கிறேனா அல்லது சுகம் தேடி வேறு எங்காகிலும் அலைந்து கொண்டிருக்கிறேனா என்று உறுதிசெய்து கொள்ள வேண்டும். சரியா?

நீங்கள் ஒவ்வொருவரும் அப்படி உறுதி செய்து பரம கானானுக்குப் பங்குள்ளவர்களாக மாற பாரத்தோடு வேண்டுகிறோம். ஆமென்! தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக!

●

# ஏன் நாங்கள் ஆராதனைக்காக கூடுகிறோம்?

சகோ. J.C. சோட்

**நா**ங்கள் கிறிஸ்தவர்களாக, கிறிஸ்துவின் சபையின் அங்கத்தினர் களாக, வாரத்தின் முதல் நாள் தோறும் தேவனை ஆராதிக்கும் நோக்கத்திற் காகக் கூடி வருகிறோம். நாங்கள் இப்படியாகக் கூடுவதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன.

முதலாவது, நம்முடைய கர்த்தரும், இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்து வின் பிதாவாகிய ஒரே தேவன் தான் இருக்கிறார் என்பதைப் புரிந்து கொள்ளவேண்டும். அவர் நம்முடைய சிருஷ்டிகரும், எல்லா ஆசீர்வாதங்க ளையும் தருகிறவருமாயிருக்கிறார். அவருடைய அன்பினாலும், அவருடைய குமாரனாகிய இயேசுவை இந்த உலகத்தின் பாவங்களுக்காக அனுப்பிக் கொடுத்ததினாலும், அவருடைய கிருபையினாலும், இரக்கத் தினாலும் நமக்கு இரட்சிப்பை சாத்தியப்படுத்தியிருக்கிறார். அவருடைய பிள்ளைகளாயிருக்கிற நாம் அவருக்காக வாழவும், சேவை செய்யவும், அவர் சொல்லியிருக்கிறபடி அவருக்கு ஆராதனை செய்யவும் விரும்பு கிறோம். “ தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுது கொள்ளு கிறவர்கள் ஆவியோடும், உண்மையோடும் அவரைத் தொழுது கொள்ள வேண்டும் ” என்று கிறிஸ்து சொன்னார் ( யோவான் 4 : 24 ). நாங்கள் சேவிக்கும் தேவன் மனிதனும் அல்ல, மிருகமும் அல்ல, உயிரற்ற ஒரு பொருளும் அல்ல, அவர் சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள், ஒரு விலங்கு, ஒரு மலை அல்லது மனிதனால் உண்டாக்கப்பட்ட ஒரு சொரூபம் போன்றவற்றை அடையாளப்படுத்தப்படுவதில்லை. அவர் ஆவியாயிருக் கிறார். அவரே எல்லாவற்றையும் உண்டாக்கினவரும், ஜீவனைத் தருபவரும், போஷிப்பவருமாயிருக்கிறார். மதிகேடன் தான் அப்படிப்பட்ட தேவனை இல்லையென்று மறுப்பான் ( சங்கீதம் 14 : 1 ).

நாம் ஏறெடுக்கும் ஆராதனையில் சேவித்தல், துதித்தல், கனப்படுத்துதல் போன்றவை இடம்பெற்றது பரலோகத்தின் தேவனை நோக்கி ஏறெடுக்கப்படுகிறது. நம்முடைய ஆராதனை ஆவியில் செய்யப்படுகிறது. அதாவது, நாங்கள் செய்பவைகளை எல்லா

நேர்மையோடும், தாழ்மையோடும், செய்கின்ற காரியங்களில் மனதை முழுமையாக ஈடுபடுத்திச் செய்கிறோம்.

நாம் ஆராதனையை உண்மையோடும் செய்கிறோம். அதாவது, நம், சத்தியத்தின்படி அல்லது தேவன் தமது வார்த்தைகளில் எவைகளைச் சொல்லியிருக்கிறாரோ அவைகளின்படி ஆராதிக்கிறோம். நாங்கள் தேவனை ஆராதிக்கிறபடியால் நாங்கள் எங்களை பிரியப்படுத்த முயற்சிக்காமல், தேவனை பிரியப்படுத்த விரும்புகிறோம்.

வேதாகமத்தின் போதனையின்படி, கிறிஸ்தவர்களாக நாங்கள் வாரத்தின் முதல் நாள் தோறும் ஆராதனைக்காகக் கூடி வருகிறோம். அதற்கான உதாரணம் நமக்கு அப்போஸ்தலர் 20 : 7 – ல் கொடுக்கப் பட்டிருக்கிறது. வாரத்தின் முதல் நாளிலே, அப்பம் பிட்கும்படி சீஷர்கள் கூடி வந்திருக்கையில், பவுல் மறுநாளிலே புறப்பட வேண்டுமென்றிருந்தது அவர்களுடனே சம்பாஷித்து, நடுராத்திரி மட்டும் பிரசங்கித்தான் என்று வாசிக்கிறோம். பழைய ஏற்பாட்டு பிரமாணத்தின்படி, ஓய்வு நாள் ஆராதனை நாளாக இருந்தது. ஆனால், கிறிஸ்து சிலுவையில் மரித்த போது, பழைய பிரமாணத்தை எடுத்துப்போட்டு, அதற்கு பதிலாகப் புதிய பிரமாணத்தைக் கொடுத்தார் (கொலோசெயர் 2 : 14). பழைய பிரமாணம் எடுத்துப் போடப்பட்டபடியால், ஓய்வு நாளும் ஆராதனை நாள் என்பதிலிருந்து எடுத்துப்போடப்பட்டது. கிறிஸ்து வாரத்தின் முதல் நாளிலே கல்லறையிலிருந்து உயிரோடு எழுந்தார் என்று நாம் வாசிக்கிறோம் ( மத்தேயு 28 : 1 – 6 ). அது போலவே, நற்செய்தியானது வாரத்தின் முதல் நாளிலே பிரசங்கிக்கப்பட்டு அந்நாளில் தானே சபை ஸ்தாபிக்கப்பட்டது. ( அப்போஸ்தலர் இரண்டாம் அதிகாரம் ). கடைசியாக, பவுல் கொரிந்து பட்டணத்து கிறிஸ்தவர்களுக்கு வாரத்தின் முதல் நாளிலே தங்கள் வருமானத்திலிருந்து கர்த்தரக்குக் காணிக்கை கொடுக்க வேண்டும் என்று எழுதினார். ஆனால், கிறிஸ்தவர்கள் வாரத்தின் முதல் நாள் தோறும் வேளை நீங்கள் சொல்லலாம். அப்படிப்பார்த்தால், பழைய ஏற்பாட்டின் கீழும் ஒவ்வொரு வாரத்திற்கும் முதல் நாள் இருக்கிறது. அந்த ஒவ்வொரு வாரத்தின் முதல் நாளும் கர்த்தரை ஆராதிக்கும்படியான கர்த்தருடைய நாளாக இருந்தால், கிறிஸ்தவர்கள் ஒவ்வொரு வாரத்தின் முதல் நாளிலும் அந்த நோக்கத்திற்காகக் கூடி வரவேண்டும்.

இப்போது, நாம் வாரத்தின் முதல் நாளிலே தேவனை ஆராதிக்கும் படியாகக் கூடும்போது என்ன செய்ய வேண்டும்? வசனங்களில் அநேக காரியங்களில் பட்டியலிடப்பட்டிருக்கிறது. அப்போஸ்தலர் 20 : 7 – ல் குறிப்பிட்டிருக்கிறபடி, கிறிஸ்தவர்கள் கர்த்தருடைய பந்தியில் பங்கு

பெறும்படி அல்லது அப்பம்பிட்கும்படி கூடியிருக்கிறார்கள். அப்போஸ்தலனாகிய பவுல் கொரிந்து பட்டணத்து கிறிஸ்தவர்களுக்கு இப்படியாக எழுதுகிறார். " நான் உங்களுக்கு ஒப்புவித்ததைக் கர்த்தரிடத்தில் பெற்றுக்கொண்டேன் ; என்னவெனில், கர்த்தராகிய இயேசு தாம் காட்டிக் கொடுக்கப்பட்ட அன்று இராத்திரியிலே அப்பத்தை எடுத்து, ஸ்தோத்திரம் பண்ணி அதைப்பிட்டு : நீங்கள் வாங்கிப் புசியுங்கள்; இது உங்களுக்காகப் பிட்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது ; என்னை நினைவு கூறும்படி இதைச் செய்யுங்கள் என்றார். ஆகையால், நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம் பண்ணும் போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள். இப்படியிருக்க, எவன் அபாத்திரமாய் கர்த்தருடைய அப்பத்தைப் புசித்து, அருடைய பாத்திரத்தில் பானம் பண்ணுகிறானோ, அவன் கர்த்தருடைய சரீரத்தையும், இரத்தத்தையும் குறித்துக் குற்றமுள்ளவனாயிருப்பான். எந்த மனுஷனும் தன்னைத்தானே சோதித்தறிந்து, இந்த அப்பத்தில் புசித்து இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணக்கடவன், கர்த்தருடைய சரீரம் இன்னதென்று நிதானித்து அறியாததினால், தனக்கு ஆக்கினைத் தீர்ப்பு வரும்படி போஜனபானம் பண்ணுகிறான் ( I கொரிந்தியர் 11 : 23 - 29).

இங்கே பவுல், அப்பமானது கிறிஸ்துவின் சரீரத்தை நினைவுகூரும்படி புசிக்கப்படவேண்டும் என்றும், பாத்திரத்தில் பானம்பண்ணுவது கிறிஸ்துவின் இரத்தத்தை நினைவு கூறும்படி செய்யப்பட வேண்டும என்றும் கூறுவதை தயவு செய்து கவனியுங்கள். வேறுவிதமாகச் சொன்னால், கர்த்தர் அவருடைய ஜனங்கள் இரட்சிக்கப்படும்படி, தான் செலுத்தின கிரயத்தைத் தொடர்ந்து நினைவு கூருகிறவர்களாக இருக்க வேண்டுமென்று விரும்புகிறார். கர்த்தருடைய பந்தியில் பங்கு பெறுவதன் மூலமாக, கிறிஸ்தவர்கள் சிலுவையைத் திரும்பி பார்க்கிறார்கள். பந்தியில் பங்கு பெறுவதால், கிறிஸ்தவர்கள் கிறிஸ்து மீண்டும் வருவார் என்பதைத் தெரிவிக்கிறார்கள். எனவே, கர்த்தருடைய பந்தி மிகமுக்கியமானது. இதில் பங்கு பெறும் வேளையானது ஆவிக்குரிய பிரகாரமாக ஒருவர் கர்த்தருக்கு முன்பாக எங்கே நிற்கிறார் என்று தன் சொந்த ஜீவியத்தை சோதித் தறியும் சந்தர்ப்பமாக இருக்கும். இது, கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவைப்பற்றிய மதிப்பு மிக்க பாடங்களை உலகிற்கு கற்றுக்கொடுக்க ஒரு வாய்ப்பைக் கொடுக்கின்றது.

அடுத்ததாக, கிறிஸ்தவர்கள் தேவனை ஆராதிக்கும்படி வாரத்தின் முதல் நாளிலே கூட வேண்டும்; அப்படி அவர்கள் செய்யும் போது,

கர்த்தருடைய வேலைக்காக கர்த்தருக்கு காணிக்கை கொடுக்க வேண்டும். பவுல் இப்படியாகச் சொன்னார். " **பரிசுத்தவான்களுக்காகச் சேர்க்கப்படும் தர்ம பணத்தைக் குறித்து நான் கலாத்தியா நாட்டு சபைகளுக்குப் பண்ணினத் திட்டத்தின்படியே நீங்களும் செய்யுங்கள். நான் வந்திருக்கும் போது பணஞ்சேர்க்குதல் இராதபடிக்கு, உங்களில் அவனவன் வாரத்தின் முதல் நாள்தோறும், தன்தன் வரவுக்குத்தக்கதாக எதையாகிலும் தன்னிடத்திலே சேர்த்து வைக்கக்கடவன்** " என்று (கொரிந்திரியர் 16 : 1, 2). மேலும், II கொரிந்தியர் 9 : 6, 7 வசனங்களில் பவுல், " **பின்னும் நான செல்லுகிறதென்னவெனில், சிறுக விதைக்கிறவன், சிறுக அறுப்பான், பெருக விதைக்கிறவன் பெருக அறுப்பான், அவனவன் விசனமாயுமல்ல, கட்டாயமாயுல்ல, தன் மனதில் நியமித்தபடியே கொடுக்கக்கடவன்; உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்** ". நிச்சயமாகவே " **வாங்குகிறதைப் பார்க்கிலும், கொடுக்கிறதே பாக்கியம்** " என்று இயேசு சொன்னார் என்று சொல்லியுள்ளார் (அப்போஸ்தலர் 20 : 35). பழைய பிரமாணத்தின் கீழ் வாழ்ந்த தேவனுடைய ஜனங்கள், தங்கள் சம்பாத்தியத்தில் தசமபாகம் அல்லது பத்தில் ஒரு பகுதியை தேவனுக்குக் கெடுக்க வேண்டும் என்று கட்டளையிடப்பட்டிருந்தார்கள். ஆனால், அநத் பிரமாணம் இப்போது நடைமுறையில் இல்லை. நாம் கிறிஸ்தவர்களா நம்முடைய வருமானத்திற்கு ஏற்ப கொடுக்க வேண்டும். அப்படியானால், அ எவ்வளவு? அது பத்தில் ஒரு பங்குக்கு மேல் என்பதில் சந்தேகமில்லை. நிச்சயமாகவே, கிறிஸ்துவின் காலத்திற்கு முன்பு வாழ்ந்தவர் களைக்காட்டிலும் நமக்கு மாபெரும் ஆசீர்வாதங்களும், வாக்குத்தத் தங்களும் இருக்கின்றன.

நாம் தேவனைத் துதிக்கும்படியான ஸ்தோத்திரப் பாடல்களைப் பாடும்படியாக வாரத்தின் முதல் நாளிலே கூட வேண்டும். பவுல் எபேசு பட்டணத்து கிறிஸ்தவர்களிடம், " **சங்கீதங்களினாலும், கீர்த்தனை களினாலும், ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் புத்திசொல்லிக் கொண்டு உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பாடிக் கீர்த்தனம் பண்ணி** " என்று சொல்கிறார் (எபேசியர் 5 : 19) கொலோசெயர் 3 :16, 17 வசனங்கின் பவுல், இப்படியாக அறிவிக்கிறார், " கிறிஸ்துவின் வசனம் உங்களுக் குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக; சங்கீதங்களினாலும், கீர்த்தனைகளினாலும், ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் புத்திசொல்லிக் கொண்டு உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பாடிக் கீர்த்தனம் பண்ணி " என்று சொல்கிறார் (எபே. 5 : 19).

கொலோசெயர் 3 : 16, 17 வசனங்களில் பவுல், இப்படியாக அறிவிக்கிறார், " கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூர ணமாக வாசமாயிருப்பதாக; சங்கீதங்களினாலும், கீர்த்தனைகளினாலும், ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் போதித்து புத்திசொல்லிக் கொண்டு, உங்கள் இருதயத்திலே கர்த்தரைப் பக்தியுடன் பாடி; வார்த்தையினாலாவது கிரியையினாலாவது நீங்கள் எதைச் செய்தாலும், அதையெல்லாம் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே செய்து, அவர் முன்னிலையாகப் பிதாவாகிய தேவனை ஸ்தோத்தரியுங்கள் " என்று. நீங்கள் பார்க்கின்றபடி இந்த வசனத்திலும், வேறு வசனப்பகுதிகளிலும் தேவனுக்கு ஸ்தோத்திரப்பாடல்களை பாடுவது வலியுறுத்தப்படுகிறது. எபிரெய ஆசிரியர் சொல்லும் போது, " உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திர பலியை தேவனுக்குச் செலுத்த வேண்டும். " என்று சொல்கிறார் (எபிரெயர் 13 : 15 ). நாங்கள் கர்த்தருடைய ஜனங்களாக ஆராதனையில் இசைக்கருவிகளை பயன்படுத்துவதில்லை.

ஆனால், ஆராதனையில் இசைக்கருவிகளை வாசிப்பதினால் என்ன தவறு இருக்கிறது? வாசிக்காமல் இருப்பதில் அப்படி என்ன நன்மை அதில் இருக்கிறது? பாடுவதினால் மாத்திரம் நாம் தேவனை ஆராதிக்க முடியாதா? நம்மால் அப்படி முடியும் என்று உங்களுக்குத் தெரியும். ஆகையால், வேதவாக்கியங்கள் தெளிவாக போதிக்கின்றபடி நாம் பாடல்களை மாத்திரம் பாடுவோம். அதற்குமேல் போவது, கர்த்தருடைய அதிருப்தியை சம்பாதிப்பதாகிவிடும். நாம் பிரியப்படுகிறபடி நாம் செய்யாமல், நாம் யாரை ஆராதிக்கிறோமோ அவர் பிரியப்படும்படியாகவே காரியங்களைச் செய்ய வேண்டும்.

கடைசியாக, வாரத்தின் முதல் நாளிலே, கிறிஸ்தவர்களாகிய நாம் தேவனை ஆராதிப்பதற்காக, சபையாகக் கூடி வந்து தேவன் தம்முடைய வார்த்தை மூலமாக நம்மிடம் பேசவும், நாம் தேவனிடத்தில் ஜெபத்தின் மூலமாக பேசவும் அனுமதிக்க வேண்டும். நாம் வசனத்தைப் படிக்கும்படியாக ஊக்கப்படுத்தப்பட்டிருக்கிறோம். (ஹுஹு தீமோத்தேயு 2 : 15). நாம் தேவ வாக்கியங்களை ஆராய்ந்து பார்க்கும்படியாக கிறிஸ்து கேட்டுக்கொண்டார். ( யோவான் 5 : 39 ). ஆதிக்கிறிஸ்தவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம் பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள். ( அப்போஸ்தலர் 2 : 42 ). வேதத்தைப் படித்தலும், ஜெபமும் இல்லாமல் தேவனை ஆராதிப்பது எப்படி சாத்தியம்?

நீங்கள் தேவனை ஆராதிக்கிறீர்களா? வழக்கமாக நீங்கள் அப்படிச் செய்கிறீர்களா? நீங்கள் ஒரு கிறிஸ்தவரா? அப்படி இல்லையென்றால், தேவன் ஏற்றுக் கொள்ளத்தக்கதாக அவரை ஆராதிக்க நீங்கள் தேவனொடு சரியான உறவில் இல்லை. நீங்கள் ஒரு கிறிஸ்தவனாகும்படி நான் உங்களை உற்சாகப்படுத்துகிறேன். விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான் என்று கிறிஸ்து சொல்லியிருக்கிறார் (மாற்கு 16 : 16). அப்படி நீங்கள் செய்தால் கிறிஸ்து உங்களை தம்முடைய சபையில் சேர்த்துக் கொள்வார் (அப்போஸ்தலர் 2 : 47). அப்போது உங்களாலும் ஆராதிக்க முடியும்.

## சுவிசேஷம் என்பதற்கு வேதாகமம் கொடுக்கும் பல பெயர்கள்

- ☞ ஜீவ வார்த்தை (1 யோவான் 1 : 1)
- ☞ தேவ வார்த்தை (அப் 4 : 31), (பிலி 1 : 14) (I தெச 2 : 13) (எபி 13 : 7)
- ☞ கர்த்தருடைய வார்த்தை (அப் 8 : 25) (I தெச 1 : 8) (II தெச 3 : 1)
- ☞ ராஜ்யத்தின் வசனம் (மத் 13 : 19)
- ☞ சுவிசேஷத்தின் வசனம் (அப் 15 : 7) (கொலோ 1 : 5)
- ☞ கிருபையின் வார்த்தை (அப் 14 : 3) (அப் 20 : 32)
- ☞ இரட்சிப்பின் வசனம் (அப் 13 : 26)
- ☞ ஒப்புரவாக்குதலின் வசனம் (II கொரி 5 : 19)
- ☞ சத்திய வார்த்தை (II கொரி 6 : 7) (கொலோ 1 : 15) (II தீமோ 2 : 15)
- ☞ நீதியின் வசனம் (எபி 5 : 13)
- ☞ ஆரோக்கியமான உபதேசம் (II தீமோ 1 : 13)
- ☞ சிலுவையின் உபதேசம் (I கொரி 1 : 18)

# பெத்தானியா “மரியாள்”

சகோ. ரேச்சல் இராஜநாயகம்

கிறிஸ்துவுக்குள் அருமையான சகோதரிகளே, இம்மாதமும் உங்களோடு சேர்ந்து பெத்தானியாவில் வாழ்ந்த மரியாளைப் பற்றி படித்துதெரிந்து கொள்ள கர்த்தர் கொடுத்த கிருபைக்காக அவருக்கு நன்றிசெலுத்துகிறேன். இந்த மரியாளைப் பற்றி புதிய ஏற்பாட்டில் லூக்க 10:38-41; மற்றும் யோவா 11; 12;1-3 ஆகிய வசனப் பகுதிகளில் பரிசுத்த ஆவியானவர்நமக்கு எழுதிக் கொடுத்திருக்கிறார்.

**நமதாண்டவரும், அருமை இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்து, மனுஷகுமாரனுக்கோ தலை சாய்க்க இடமில்லை என்று** கூறுகிறார். முப்பது ஆண்டுகாலம் தன் பெற்றோருடன் நாசரேத்தில் வளர்ந்து, வாழ்ந்து பிறகு ஊழியத்தின் பாதைக்கு அடியெடுத்து வைத்து 31/2 ஆண்டு காலமும்மீண்டும் தான் வளர்ந்த ஊருக்கு வந்து, இளைப்பாறி, ஓய்வெடுத்ததாக நாம்வேதத்தில் வாசிக்க முடியாது. அவர் தன் கால்களால் சுற்றித் திரிந்தே பிதாவின் சித்தத்தை நிறை வேற்றினார். அவ்வாறு சுற்றித் திரிகையில், தாம் இளைப்பாற தெரிந்தெடுத்த இடம் பெத்தானியா. இந்த பெத்தானியாவில் தான் மார்த்தாள், மரியாள், லாசரு என்ற மூவரும் வாழ்ந்து வந்தார்கள். இயேசு அடிக்கடி இவர்கள் வீட்டிற்குச் சென்று தங்கி இளைப்பாறியிருக்கிறார் என்று வேதத்தில் நாம் வாசிக்கிறோம்.

மார்த்தாள், மரியாள் இருவருமே இயேசுவை அதிகம் நேசித்தார்கள். இயேசுவும் இவர்களில் அன்புள்ளவராக இருந்தார். ஆனால், உலகக்காரியங்களுக்கு முக்கியம் கொடுக்க அவள் சரீரமும், மனதும் உடன்படுவதேயில்லை. எப்போதும் உள்ளூர ஒரு சிந்தையுடையவளாகவே இருந்து வந்தாள். ஆழமான, ஆவிக்குரிய சிந்தையை பெற்றுக் கொண்டிருந்த இந்த மரியாள், வெளியுலகக் காரியங்களில் தன் வேகத்தைக் குறைத்து, தன் சிந்தனைக்கும், மனதுக்கும் அதிக வேலையும், வேகமும் கொடுத்து வாழ்ந்து கொண்டு வந்தாள்.

இப்பேர்ப்பட்ட மரியாளிடம் நாம் சில பாடங்களை கற்றுக் கொள்ள தேவன் உதவி செய்வாராக.

**முதலாவது, அவள் ஒரு ஆவிக்குரிய மாணாக்கி:**

இயேசுவின் புனிதமான பாதத்தருகே அமர்ந்து, மாசற்ற உண்மையை வாஞ்சித்து கேட்பதற்கு, அமைதியாகவும், சமாதானமாகவும் தன்னை அமர்த்துவது, மற்ற எல்லா வற்றைக் காட்டிலும் விருப்பமா யிருந்தது. புதியஏற்பாட்டில் பார்க்கும் மற்றவர்கள் எல்லா ரிலும் இயேசுவின் பாதத்தோடு தன்னை சம்பந்தப்படுத்திக் கொண்டு, தன்னை தாழ்த்தி, மரியாதையோடும்,ஆவிக்குரிய அறிவைப் பெற்றுக் கொள்ள பசியோடும் இருந்தவள் இந்த மரியாள் தான். இயேசுவின் விருப்பத்தையும், அவருடைய வாயிலிருந்து புறப்படும் வார்த் தையின்மேலும் ஒரு ஆவலும், ஓர் நம்பிக்கைமுயுடையவளாய் இருந்ததினால் அவர் பாதத்தில் அமர்ந்து கேட்பதை மிகவும் விரும்பினாள். அப்போஸ்தலனா கிய பவுல் தான் கற்றதைக் குறித்து கூறும் போது, நான் யூதன், சிலிசியா நாட்டிலுல்ல தர்சுபட்ட ணத்திலே பிறந்து, இந்த நகரத் திலே கமாலியேவின் பாதத்தருகே வளர்ந்து.... நானும் வைராக் கியமுள்ளவனாயிருந்தேன் (அப். 22:3) என்று கூறுகிறார். **போதகர்களுக்கெல்லாம் போதகரா யிருக்கிற நமதருமை இரட்சகர் இயேசு பன்னிரண்டு வயதாய் இருக் கையில், அவர் கற்றுக் கொண் டதைப் பற்றி பேசும் போது, மூன்று நாளைக்குப் பின்பு, அவர் தேவாலயத்தில் போதகர் நடுவில் உட்கார்ந்திருக்கவும், அவர்கள் பேசு கிறதைக் கேட்கவும் அவர்களை வினா வவும் கண்டார்கள்** (லூக்கா.3:46) என்று லூக்கா ஆசிரியர் கூறுகிறார். இப்பேர்ப்பட்ட கற்றுக் கொள்ளும் இதயத்தை மரியாள் பெற்றிருந்ததினால் தன்னை விட்டு எடுபடாத நல்லபங்கை பெற்றுக் கொண்டாள். அருமை யான சகோதரிகளே நாமும் அவர் பாதத்தை வாஞ்சித்து, நாடி, மணிக்கணக் காய் அவர் பாதத்தில் விழுந்து கிடந்து நல்ல பங்காகிய இரட்சிப்பை பெற்றுக் கொள்வோம்.

**இரண்டாவதாக, மரியாள் துக்கம் கொண்ட ஒரு ஸ்திரீ:**

மார்த்தாள், மரியாள் இருவருமே தாங்கள் அதிகம் நேசித்த லாசருவின் மரணத்தில் துக்கமுடையவர்களாக இருந் தார்கள். ஆனால்,மரியாளின் கண்ணீர் பற்றித்தான் வேதம் பேசுகிறது. இயேசு வருகிறார் என்று மார்த்தாள் கேள்விப்பட்ட போது, அவருக்கு எதிர்கொண்டு போய், ஆண்டவரே, நீர் இங்கே

யிருந்தீரானால் என் சகோதரன் மரிக்கமாட்டான் என்றாள் (யோ 11:21) மரியாளோ வீட்டில் உட்கார்ந்து தன் துக்கத்தை இன்னும் அதிகப்படுத்தினவளாக இருந்தாள். போதகர் உன்னை அழைக்கிறார் என்பதைக் கேட்ட மரியாள் எழுந்து போய், அவரைக் கண்டவுடனே அவர் பாதத்தில் விழுந்து (யோவான். 11:32) அழு தாள் (11:33) இவள் கண்ணீரைக் கண்ட நம் இயேசு ஆவியிலே கலங்கி, துயரமடைந்து அவரும் கண்ணீர் விட்டார். இவர்தான் நம் இயேசு. நம் கண்ணீருக்கு பதில் செய்கி றவர் நம் இயேசு. காலம் தாழ்த்தினாலும் நம் கண்ணீரை காணாமல்இருக்க அவர் மனது கல் அல்ல. எனவே, அருமை யானவர்களே, மரியாளின் கண்ணீருக்கு பதில் கண்ணீர் விட்ட இயேசு நம் கண்ணீரையும் துடைப்பார். ஆனால், நம்மில் அநேகர் கண்ணீர் விடுவதே இல்லை. கண்ணீர் விடுவது கேவலம் என்று நினைக்கிறோம். கிறிஸ்து இயேசுவில் இருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக் கடவது (பிலி 2:5) என்று வாசிக்கிறோம். அப்படியானால் கிறிஸ்து அழுதார். நாமும் ஆத்து மாவில் பாரம் கொண்டு கண்ணீர் விட்டு அழுவோம்.

**மூன்றாவதாக, மரியாள் ஓர் பலனுள்ள ஊழியக்காரி:**

பெத்தானியாவின் மரியாள் மூலமாக யூதர்களில் அநேகர் இயேசுவிடம் விசுவாசமுள்ள வரானர்கள் என்பதை நாம் மறந்து விடக்கூடாது. செத்து, நாலு நாள் ஆகிய மரியாளின் சகோதரனாகிய லாசருவை உயிரோடு எழுப்பிய மகா சம்பவம் பற்றி பேசவும், எழுதவும் நமக்கு அறிவுபோதாது. தேவனிடம் சித்தமும், இயேசுவின் மூலம் அவர் மகிமைப்படுவதும் நம்மை வியப்பில் ஆழ்த்துவ தோடு, ஆறுதலையும், நம்பிக்கை யையும் கொடுக்கிறது. மரியாள் எழுந்து இயேசுவை நோக்கி போகிறதைப் பார்த்த யூதர்கள் அவள் பிறகேயே போகிறார்கள். மரியாளின் அழுகை மற்றவர் களை, அதுவும் இயேசுவை மேசியா தான் என்று நம்ப மறுத்த யூதர்களையே அவர் பின்னே போக வைத்தது (11:31) அப்படிப் போனதினால் இயேசுவின் மேல் விசுவாசம் வைத்தார்கள். அப்பொழுது மரியாளிடத்தில் வந்திருந்து, இயேசு செய்த வைகளைக் கண்டவர்களாகிய யூதர்களில் அநேகர் அவரிடத்தில் விசுவாசமுள்ளவர்களானார்கள் (யோ. 11:45).நாமும் மரியாளைப் போல ஆத்துமாக்கள் உயிர்ப் பிக்கப்பட கண்ணீரோடு ஊழியம் செய்வோம்.

**நான்காவதாக, மரியாள் நன்றியுள்ள கொடுக்கும்**

**உள்ளம் கொண்டவள்:**

லாசருவை உயிரோடு எழுப்பினதிற்கு நன்றிக் கடன் செலுத்தும்படியாக பெத்தானி யாவில் சீமோன் என்கிறவன் வீட்டில் ஒரு விருந்து ஆயத்தப் படுத்தப்படுகிறது. அப்பொழுது மரியாள் விலையேறப் பெற்ற களங்கமில்லாத நளதம் என்னும் தைலத்தில் ஒரு இராத்தல் கொண்டுவந்து, அதை இயேசுவின் பாதங்களில் பூசி, தன் தலைமயிரால் அவருடைய பாதங்களைத் துடைத்தாள்; அந்த வீடு முழுவதும் தைலத்தின் பரிமளத்தி னால் நிறைந்தது (யோ 12:3). இச்சம்பவம் மத். 26:6-13, மற்றும் மாற்கு 14:3-9, (யோ: 11:1; 12:1-11) ஆகிய வசனங்களில் இடம் பெற்றிருக்கிறது. இந்த நன்றிக் கடன் செலுத்தும் இந்த விருந்தில் நம்மைச் சிந்திக்க வைப்பது என்னவென்றால், மரியாளின் எந்த ஒரு உரையாடலையும் நாம் காணமுடியாது. மரியாள் எதுவும் பேசவில்லை! மரியாள் உட்கார்ந்து, கவனித்துக் கொண்டிருந்தாள். ஒன்றும் பேசவில்லை (யோ. 10:39). லாசருவின் கல்லறையினருகில் மரியாள் அழுதாள் ஒன்றும் பேசவில்லை. சீமோனின் வீட்டில் அவர் நற்கிரியை செய்கிறாள். ஒன்றும் பேசவில்லை. ஒரே ஒரு முறை மரியாள் பேசினாள் என்றால், அது மார்த்தாள் சொன்னதை திருப்பி சொன்ன போது தான் (யோ. 11:32). அமைதியான அன்பு வல்லமை யான ஆயுதம், மரியாள் இயேசுவின் பாதத்தில் பூசின தைலம் மிகவும் விலையுயர்ந்தது. அந்த தைலம் இன்னும் உலகம் முழுவதும் மணம் வீசிக் கொண்டுள்ளது.

மரியாளின் தைலம் அநேகருக்கு மணம் வீசினாலும் சிலருக்கு அதுவீண் என்று தோன்றியது. பண ஆசைபிடித்த யூதாசுக்கு அது வீணாகதெரிந்தது. இன்னும் உலகத்தில் நறுமணம்மிக்க சிலுவையைப் பற்றிய உபதேசம் கெட்டுப் போகிறவர்களுக்கு பைத்தியமாய் தோன்றுகிறது. மரியாளின் செயல் அங்கீகரிக்கப்படுகிறது. அருமை இரட்சகர் இயேசு கிறிஸ்து அவளை தொந்தரவு செய்கிறவர்களைப் பார்த்து, அவளை விட்டுவிடுங்கள் ஏன் அவளை தொந்தரவுபடுத்துகிறீர்கள்? என்னிடத்தில் நற்கிரியைச் செய்திருக்கிறாள். (மாற்கு : 14 : 6) என்கிறார். ஆமென்! ●

**ரோமரில்**
**ஆபிரகாமின் விசுவாசம்**

1. நம்பிக்கையுள்ள விசுவாசம் (5 : 18)
2. பலமுள்ள விசுவாசம் (5 : 19)
3. சந்தேகமில்லாத விசுவாசம் (5 : 20)
4. முழு நிச்சயமான விசுவாசம் (5 : 21)
5. வல்லவனாக்கின விசுவாசம் (5 : 21)

வாலிபர் பகுதி

# சரீர முயற்சி அற்ப பிரயோஜனமுள்ளது!

Bro. பென்னி மார்ட்டின்

**பி**ரியமான வாலிபர்களே! உங்கள் யாவருக்கும் நசரேய னாகிய இயேசுவின் நல்நாமத்தில் வாழ்த்துதள்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். பொதுவாகவே, வாலிபர்கள் தங்கள் சரீரத்தைப் பேணிக் காப்பதில் அதிக அக்கறை செலுத்துவதுண்டு. உடலுக்குத் தேவையான சத்தான உணவை உட்கொள்வதிலும், உடலுக்கு நீங்கிழைக்கின்ற உணவுப் பொருள் களிலிருந்து விலகியிருப்பதிலும் அதிக அக்கறைப்படுவதுண்டு. சில வாலிபர்கள் ஒருபடி மேலே சென்று உடற்பயிற்சி செய்து தங்கள் உடலை கட்டுக்கோப்பாக வைத்துக் கொள்கிறார்கள். அப்படி உடற்பயிற்சி செய்வதில் எந்தத் தவறும் கிடையாது. அதனால் உடலுக்குப் பிரயோஜனம் இருக்கத் தான் செய்கிறது. ஆனால், சதா அதைப்பற்றியே சிந்தித்துக் கொண்டிருப்பது ஆவிக்குரிய வளர்ச்சியில் மிகப் பெரிய சேதத்தை ஏற்படுத்தும். அப்போஸ்தலனாகிய பவுல் ( I தீமோத் 4 : 8). சரீர முயற்சி அற்ப பிரயோஜனமுள்ளது. தேவ பக்தியால் எல்லாவற்றிலும் பிரயோஜனமுள்ளது என்று புத்திமதிச் சொல்கிறார். இதன்மூலம் சரீ முயற்சி அற்ப அல்லது கொஞ்ச பிரயோஜனமுள்ளது என்பதை நாம் அறிந்துபோகும் இவ்வுடலை மேம்படுத்த தங்கள் பணத்தையும், நேரத் தையும் விரயம் செய்கிறார்கள். இவ்வசனத்தில் பவுல் சரீப்பிரகாரமான உடற்பயிற்சி காட்டுகிறார். சரி இப்போது சரியான ஆவிக்குரிய உடற்பயிற் சிக்கு என்னவெல்லாம் அவசியப்படுகிறது என்பதை அறிந்து கொள்வோம்.

I. **ஆயத்தம்**

பொதுவாக, சரீரப்பிரகாரமான உடற்பயிற்சி செய்வதற்கு முதலில் நாம் ஆயத்தமாகவேண்டும். அதாவது, மனதில் உடற்பயிற்சி செய்ய தீர்மானிக்க வேண்டும். அதைப்போலவே, செயல்படுவதற்கும் ஆவல் இருக்க வேண்டும். ஆவிக்குரிய உடற்பயிற்சியிலும் இது உண்மையாயிருக்கிறது. I பேதுரு 1 : 13 ல் “ ஆகையால், நீங்கள் உங்கள் மனதில் அரையை கட்டிக் கொண்டு தெளிந்த புத்தியுள்ளவர்களா யிருந்து; இயேசு கிறிஸ்து வெளிப் படும்போது உங்களுக்கு அளிக்கப்படும் கிருபையின் மேல் பூரண நம்பிக் கையுள்ளவர்களாயிருங்கள் என்று வாசிக்கிறோம். எனவே, ஒருவர்

ஆவிக்குரிய உடற்பயிற்சியில் ஈடுபடுவதற்கு முன்பாக மனதளவில் ஆயத்தமாக வேண்டும். மனதில் தீர்மானித்து ஆயுத்தமானவுடன் நாம் செயல்படத் தொடங்க வேண்டும். தேவனுடைய வார்த்தையை நாம் அனுதினமும் கேட்கிறோம். அவைகளை உள்வாங்கிக் கொண்டு கேட்டவைகளை நாம் நடைமுறைப்படுத்தும்போது ஆவிக்குரிய உடற்பயிற்சியைச் செய்கிறோம். அதே போல், உடற்பயிற்சி என்று வரும்போது சில காரியங்களை திரும்பத்திரும்ப செய்ய வேண்டும். ஆவிக்குரிய உடற்பயிற்சியில் எப்படி? சிறிது நேரம் ஜெபித்துவிட்டு நாம் பக்தியாக இருக்கிறோம் என்று சொல்லிவிட முடியாது. ஒன்றிரெண்டு வசனங்களை வாசித்துவிட்டு நாம் தியானிக்கிறோம் என்று செல்ல முடியாது. அதுபோல் வாரத்தில் ஒரு முறை தேவனை ஆராதித்து விட்டு நாம் தேவனுக்கு உண்மையாயிருக்கிறோம் என்று சொல்ல முடியாது. சிலர் கிறிஸ்துவுக்குள் வந்ததும் ஆரம்ப நாட்களில் மிகவும் ஊக்கமாக ஜெபிப்பார்கள். ஆனால், பாடுகள் வரும் போது அப்படியே பின் வாங்கிப் போவார்கள். சரீரப் பிரகாரமான உடற்பயிற்சியை ஒருவர் தொடக்கத்தில் ஆர்வத்தோடு செய்துவிட்டு சில நாட்கள் கழித்து அதைத் தொடர்ந்து செய்யாத போது, சரீரத்திற்கு எப்படி பாதிப்பை ஏற்படுத்துகிறதோ, அதே போல் தான் ஒருவர் ஆவிக்குரிய உடற்பயிற்சியில் ஈடுபட்டுவிட்டு, அதைத் தொடர்ந்து செய்யாகப் விட்டுவிட்டால், தன் ஆத்துமா எந்த செயலிலும் ஜெயிக்க முடியாது. சரீரப்பிரகாரமான உடற்பயிற்சியில் கூடயிருக்கும் போது, ஆவிக்குரிய உடற்பயிற்சியில் தேவனுடைய வார்த்தைகளை அப்பியாசப்படுத்துவதில் தொடர்ச்சி இல்லையென்றால் அது ஆவிக்குரிய வளர்ச்சியில் தடைகளை ஏற்படுத்தும்.

II. **எதிர்க்கும் திறன்**

சரீரப்பிரகாரமான உடற்பயிற்சியில் பயிற்சி செய்ய முடியாதபடி அதற்கு தடைகள் ஏற்படும்போது அவைகளை எதிர்த்து தொடர்ந்து பயிற்சியில் ஈடுபட்டால் தான் உடற்பயிற்சியின் நன்மைகளை நாம் பெற்றுக் கொள்ள முடியும். இன்றைய நாட்களில் அநேக வாலிபர்கள் தங்கள் உடலைக் கட்டுக்கோப்பாக வைத்துக் கொள்ள வேண்டுமென்பதற்காக உடலை வருத்தி கடினமான பயிற்சியில் ஈடுபடுகிறார்கள். நாமும் ஆவிக்குரிய உடற்பயிற்சியில் அதாவது, தேவனுடைய வார்த்தைகளை கைக்கொள்ளும்போது, பிசாசால் சோதனைகள் வரும் போது அவைகளை எதிர்த்து நாம் வீர நடைபோடவேண்டும். அப்போது தேவன் சோதனைகளிலிருந்து தப்பித்துக்கொள்ளும் போக்கை நமக்கு உண்டாக்குவார் (I கொரி 10 : 13). நாம் தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தை

எடுத்துக் கொண்டு அவைகளை எதிர்க்க வேண்டுமென்று கட்டளையிடப்பட்டிருக்கிறோம் (எபே. 6 : 13).

கிறிஸ்தவ ஜீவியத்தில் ஏற்படும் பாடுகள், உபத்திரவங்கள் சோதனைகள் போன்றவைகளை நாம் மேற்கொண்டு தீங்கை எதிர்த்து நலமானவைகளை பற்றிக்கொண்டால் தேவ பக்தியோடுடே ஆவிக்குரிய உடற்பயிற்சியில் ஈடுபடமுடியும். நம் ஆவிக்குரிய வாழ்க்கையில் எதிர்ப்புகளோ, தடைகளோ இல்லையென்றால் நாம் மெத்தனப்போக்கை கடைபிடித்து வராமல் இருப்போம். கிறிஸ்தவ வாழ்க்கையில் நாம் அனுதினமும் வர வேண்டுமென்று தேவன் எதிர்ப்பார்க்கிறார். வேத வசனங்களில் நாம் பார்க்கும் போது எருசலேமிலுள்ள சபைக்குத் துன்பம் உண்டான போது அப்போஸ்தலர் தவிர மற்ற யாவரும் சிதறப்பட்டுப்போனார்கள், சிதறிப்போனவர்கள் எங்கு திரிந்து சுவிசேஷ வசனத்தை பிரசங்கித்தார்கள், சபை வளர்ந்தது (அப். 8).

பிரியமான வாலிபர்களே! இதுகாறும் நாம் சரீரப் பிரகானமான உடற்பயிற்சியை விடாது தொடர்ச்சியாக செய்யும் போது அதன் நன்மைகளை அனுபவிக்கிறோம். அதேபோல், சோம்பேறித்தனத்தாலோ, தடைகளினாலோ, பாடுகளினாலோ நாம் ஆவிக்குரிய பயிற்சியை விட்டு விட்டால் அல்லது பின் வாங்கிப் போனால் அது நம் ஆத்துமாவுக்கு பெருத்த சேதத்தை ஏற்படுத்தும். அப்போது தேவனுடைய ஆத்துமா நம்மில் பிரியமாயிராது (எபி. 10 : 38) என்று கற்றுக்கொண்டோம். இவைகள் நீங்கள் ஆவிக்குரிய உடற்பயிற்சியில் ஈடுபட பிரயோஜனமாயிருக்கும் என்று நம்புகிறேன்.

### III. **ஆவிக்குரிய போஷக்கு**

எப்படி சரீரப்பிரகாரமான உடற்பயிற்சிக்கு ஆகாரம் அவசியமாகிறதோ அதேபோல் ஆவிக்குரிய உடற்பயிற்சிக்கும் ஆகாரம் அவசியமாகிறது. அனுதினமும் நாம் பல்வேறுப்பட்ட முடிவுகளை எடுக்கிறோம். அப்படி முடிவெடுப்பதில் நம்மை வழிநடத்த தேவனுடைய வார்த்தையாகிய ஆவிக்குரிய போஷாக்கு நமக்கு அவசியமாகிறது. அதேபோல் அனுதினமும் நாம் பலவிதமான சாவால்களை, சோதனைகளை எதிர்கொள்கிறோம். அவைகளுக்கு எதிராக எதிர்நீச்சல் போட நமக்கு பெலனற்றுப்போகும் போது இவ்வுலகத்தின் தத்துவ ஞானங்கள், பொன்மொழிகள் போன்றவைகள் எவ்விதத்திலும் நமக்கு ஆறுதல் தரவே முடியாது. நமக்கு தேவனுடைய வார்த்தையால் மட்டுமே ஆறுதலை தரமுடியும். இன்று பசுமை புரட்சி என்ற

பெயரிலும், பெருகி வரும் மக்கள் தொகைக்கேற்ப உணவு தானியங்களை பெருக்குகிறோம் என்று சொல்லியும் முறையற்ற முறையில் நச்சு நிறைந்த, தூய்மையற்ற, கலப்படமான ஆகாரத்தை தயார் செய்கிறார்கள். அதன் விளைவாக வாயில் நுழையாத பெயர்களுடன் நோய்கள் வலம் வந்து நம்மை தாக்குகின்றன. மாசும், கலப்படமும் நிறைந்த இவ்வுலகில் ஆவியாயும், ஜீவனாயும் இருக்கிற தேவனுடைய வார்த்தை மட்டுமே மாசற்ற, கலப்படமற்ற ஒன்றாக இருக்கிறது. நாம் அவைகளை ஏராளமாக, தாராளமாக உட்கொள்ளும் போது அது கசப்பான நம் வாழ்வை இனிதாக்குகிறது. இப்பூமிக்குரிய ஆகாரத்தை நாம் தொடர்ச்சியாக உட்கொண்டு எவ்வித உடற்பயிற்சியும் செய்யாமல் இருந்தால் அது நம் உடலில் மோசமான விளைவுகளை ஏற்படுத்தும், அதே போல் ஆவிக்குரிய போஷாக்கை தொடர்ச்சியாக உட்கொண்டு விட்டு நம் வாழ்க்கையில் தேவனுக்கு பிரியமாக அவைகளை அப்பியாசப்படுத்தவில்லை என்றால் அது ஆவிக்குரிய வாழ்வில் மோசமான விளைவுகளை ஏற்படுத்தும். அதற்கு அதிக விலையை நாம் கொடுக்காத படி விழித்திருப்போம்.

●

## நாளும் நடப்பும்

- *ஆதார் அட்டை சட்ட மசோதா நிறைவேறியது.*
- *தமிழகத்தில் 9,360 வாக்குச் சாவடிகள் பதற்றமானவை என்று தேர்தல் ஆணையம் கணித்துள்ளது.*
- *பாஜக தான் மிக மோசமான தேச விரோத சக்தி - அர்விந்த் கேஜ்ரிவால்*
- *மீண்டும் ஒரு முறை பெட்ரோல், டீசல் விலை உயர்த்தப் பட்டுள்ளது.*
- *உலகப்போப்பை T-20 கிரிக்கெட் விளையாட்டு உச்சத்தை நோக்கி நகர்ந்து கொண்டுள்ளது.*
- *அமெரிக்க தேர்தல் : ட்ரம்ப் தொடர்ந்து முன்னிலை பெற்று வருகிறார்.*

சிறுவர் பகுதி

# நன்றியோடு இருங்கள்

Bro. ஏபில் நாயகம்

**எ**னக்கு பிரியமான சிறு தம்பி தங்கைகளே, உங்கள் யாவருக்கும் ஆண்டவராகிய இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள். இந்தக் கல்வியாண்டின் இறுதியில் இருக்கிறீர்கள். அப்படித்தானே? இந்த நேரத்தில் நீங்கள் தேவனுக்கு நன்றிகளை செலுத்த வேண்டும். ஏனென்றால், இந்த கல்வி ஆண்டு முழுவதும் உங்களை கவனித்துப் பராமரித்து வந்தார் அல்லவா? அதற்காக நீங்கள் நன்றியுள்ள பிள்ளைகளாக இருக்க வேண்டும். தேவனும் அதை எதிர்பார்க்கிறார். ஆம், பிள்ளைகளே! இங்கே, நாம் ஒரு வேதாகம சம்பவத்தைப் பார்க்கலாம்.

லூக் : 17 : 11 -19 ல் இயேசு கிறிஸ்து **பத்து** குஷ்டரோகிகளை சுகமாக்கும் சம்பவம் உள்ளது. அதில், அந்த குஷ்டரோகிகள் இயேசுவை நோக்கி சரீர சுகம் வேண்டும் என்று கேட்டார்கள். அவர்கள் கேட்ட வண்ணமாகவே சுகம் கிடைத்தது.

ஆனால், சுகம் தந்த இயேசுவைப் பார்த்து நன்றி சொல்ல பத்துப் பேரில் ஒருவன் மட்டுமே திரும்பி வந்தான். மற்ற ஒன்பது பேர் அப்படி வரவில்லை. அப்பொழுது இயேசு " சுத்தமாக்கப்பட்டவர்கள் பத்துப் பேர் அல்லவா? மற்ற ஒன்பது பேர் எங்கே? " என்று கேட்டார். இதிலிருந்து என்ன என்ன தெரிகிறது? நாம் பெற்ற நன்மைகளுக்கு நாம் தேவனுக்கு நன்றி சொல்ல வேண்டுமென்று தேவன் எதிர்பார்க்கிறார்.

எனவே, கல்வி ஆண்டின் இறுதியில் உள்ள நீங்கள், இக்கல்வியாண்டு முழுவதும் உங்களை நடத்தின தேவனுக்கு நன்றி சொல்லி, உங்கள் பங்கை எவ்விதக் குறைபாடும் இல்லாமல் நிறைவேற்றி, வெற்றியோடு இந்த ஆண்டை முடிக்க உங்களை உற்சாகப்படுத்துகிறேன். உங்களுக்காக எங்கள் ஊழியத்தின் சார்பாக நாங்கள் ஜெபிக்கிறோம்.

Best of luck for your exams
- God bless!

மருத்துவக் குறிப்பு

# Heat Stroke
## வெப்ப அதிர்ச்சி

வெப்பம் சம்பந்தமாக ஏற்படும் பாதிப்பு பல. அவற்றுள் வெப்பம் சம்பந்தமாக ஏற்படும் வெப்ப **அதிர்ச்சி** என்பது மிக முக்கியமாகும். உடனடியாக மருத்துவமனைக்கு சென்று தக்க வைத்தியம் பெற வேண்டும். வரப்போகும் கோடை காலத்தில் இதைப்பற்றின தகவல் நிச்சயம் பிரயோஜனமாக இருக்கும். சரி, வெப்ப அதிர்ச்சி என்றால் என்ன?

மிக அதிகமான வெப்பத்தில் வெகு நேரம் உடல் இருப்பதினால் ஏற்படும் ஒரு வகை உடல் பெலவீனம் தான் வெப்ப அதிர்ச்சி. வெப்பத்தோடு நீர்ப்போக்கு ( Dehydration ) ஏற்படும் போது இது ஏற்படுகிறது. இது வழக்க மாக 50 வயதிற்கு மேல் உள்ளவர்களை அதிகமாக பாதிக்கும். வெயில் காலங்களில் சரியான காற்றோட்டம் இல்லாத அறைகளில் வசிப்பது. போதிய அளவு நீர் அருந்தாமல் விடுவது, உடலின் வெப்பம் வெளியேற வழியில்லாத ஆடைகளை அணிவது போன்றவை இது ஏற்படக் காரணங்கள் ஆகும்.

**அறிகுறிகள் :**

உடலின் வெப்பம் 105° F க்கு மேல் இருப்பது மிக முக்கியமான அறிகுறி. வெயில் காலங்களில் மயங்கி விழுவது வழக்கமான ஒரு அறி குறி. இவற்றோடு தலைவலி, தலைசுற்று, வியர்வை வராமல் இருத்தல், வாந்தி, உடல் பலவீனம் போன்றவைகளும் வெப்ப அதிர்ச்சியின் அறிகுறி களாகும். இது மூளையைப் பாதிக்கும் ஒரு உடல் பலவீனம் ஆகும்.

**வராமல் இருக்க :**

- கோடை காலத்தில் லேசான ஆடைகளை அணிய வேண்டும்.
- அதிகமான நீர் பருக வேண்டும். குறைந்தது ஒரு நாளைக்கு 4லி நீர் பருக வேண்டும்.
- உடற்பயிற்சி செய்யும் போது அதில் வியர்வையாக வெளியேறும் நீரின் அளவைவிட இரு மடங்கு நீர் பருக வேண்டும்.
- வெயிலில் நடமாடுவதை குறைத்துக் கொள்ள வேண்டும்.

நீங்கள் நலமுடன் இருக்க ஜெபிக்கிறோம்.

Dr. Abel Nayagam
Vellore

# ஏன் தேவனுக்கு பயப்பட வேண்டும்?

சகோ. **பாண்டியன்**

**ஆ**ண்டவர் இயேசுவின் நாமத்தில் யாவருக்கும் வாழ்த்துதலும், சமாதானமும் உண்டாவதாக. நாம் அறிந்துள்ளபடி இன்றைய நாட்களில் சபைகளில் தேவபயம் குறைவாக இருக்கிறது. இதுவே பல பிரச்சனைகளுக்கு அடிப்படையான ஒரு காரணமாகவும் உள்ளது. தேவபயம் ஏன், எதற்கு, அதினால் நமக்கு என்ன பிரயோஜனம் என்பதை வேதவசன உதவியோடு நாம் சற்று நிதானிப்போம். சில அதிகப் பிரசங்கிகள் தேவனிடம் பக்தி இருந்தால் போதும் பயப்படத் தேவையில்லை என்றும் சொல்வதுண்டு! அதற்கு காரணம் யோவான் 4:18 ல் பூரண அன்பு பயத்தைப் புறம்பேதள்ளும் என்ற வசனத்தை சுட்டிக் காண்பிப்பது உண்டு. ஆனால், அங்குக் குறிப்பிடப்படும் பயம் நியாயத்தீர்ப்பு பற்றியது – தேவனுக்கு பயப்படுவது பற்றி அல்ல!

தேவனுடைய வார்த்தையானது நாம் தேவனுக்குப் பயப்படுவதின் அவசியத்தைப் போதிக்கின்றது. முதலாவது நாம் தேவனுக்கு பயப்பட வேண்டும் என நம் ஆண்டவர் இயேசு தெளிவாக அறிவித்துள்ளார். பொதுவாக மனிதன் இவ்வுலகில் சிலருக்கு பயந்து தான் வாழ்கிறான் உதாரணமாக, வேலை செய்யுமிடத்தில் முதலாளி களுக்கு, அரசாங்க அதி காரிகளுக்கு, சமுதாயத்தில் காவல் துறையினருக்கு மற்றும் தீய மனுஷருக்குக்கூட பயந்து நடக்க வேண்டியுள்ளது. இவையெல்லாம் அறிந்த ஆண்டவர் லூக்கா 12:4,5 ல் மனுஷருக்கல்ல நீங்கள் சரீரம் மற்றும் ஆத்துமாவை (நரகத்தில் அழிக்க வல்ல தேவனுக்கே முதலாவது பயப்பட வேண்டும் என்னு காண்பிக்கின்றார். சொன்னது மாத்திரமல்ல அவர் தமக்கு உண்டான பயபக்தியினிமித்தம் கேட்கப்பட்டு, கீழ்படிதலைக் கற்றுக் கொண்டு அதைக்கண்டு நாம் நித்திய ரட்சிப்படைய காரணராக உள்ளார் ( எபி.5:7-9) என்றும் வாசிக்கின்றோம். எனக்கன்பானவர்களே! நாம் மோ சம் போகாதிருப்போம். சபையார் தேவனுக்கு பயந்து கிறிஸ்துவின் வழியில் நடந்து நமக்கு நன்மை உண்டாக அவருடைய கட்டளைக் கைக்கொள்ள வேண்டும் என்று நம்மிடத்தில் தேவன் எதிர்பார்க்கிறார் – கேட்கிறார் (உபா.

10:12,13) அது மாத்திரமல்ல, நாம் இப்பொழுது அனுபவிக்கும் ஒவ்வொரு ஆசீர்வாதங்களுக்கும் அவரே காரணராய் இருப்பதால் நாம் அவருக்கு பயந்து நடக்க வேண்டும் என யோசுவா ஜனங்களைப் பார்த்துச் சொன்னார் யோசுவா 24:13,14. அதே அதிகாரத்தில் மனுஷரை குடியிருக்கவும் அவர்களுடைய எதிரிகளிடமிருந்து அவர்களைக் காப்பாற்றுவது மாத்திரமல்ல, அவர்களின் மீது வர இருந்த சாபங்களை நீக்கி தேவன் ஆசீர்வதித்து இருக்கிறார் என்றும் யோசுவா குறுப்பிட்டுக் காட்டுகிறார். தேவன் இஸ்ரவேலரை மாத்திரமல்ல, இன்றைக்கும் என்னையும் உங்களையும் மற்ற மனுஷரின் அகங்காரத்திற்கும், சண்டைக்கும் விலக்கி காத்து கவருவது நமக்கு தெரியாமல் இருக்கலாம். ஆனால், அது தான் உண்மை: சங். 31:19,20. உலக ஞானியாக சாலமோன் இவ்வுலக இன்பங்கள் அனைத்தையும் அனுபவித்துப் பின் அவையெல்லாம் வெறும் மாயை, வீண் என்று அறிவித்தார். அதற்கும் சிலர் நாங்களும் அனுபவித்து பார்க்க விரும்புகிறோம் என்கிறார்கள். ஆனால், அப்படிப்பட்டவர்களின் நிலையை நீதி 5:10-14. உன் சம்பாத்தியம், நற்பெயர், உடல் நலம் எல்லாம் கெட்டு அழிந்த பின் நீ திருந்தி என்ன லாபம்? மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்தினாலும் தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லபாம் ஒன்றுமில்லை என்று நம் ஆண்டவர் சொன்னதை நினைவு கூறுவோம்.

எனவேதான், " கர்த்தருக்குப் பயப்படுதலே ஞஸனத்தின் ஆரம்பம் " என்று சாலமோன் கூறுகிறார். ஞானம் வேறு, அறிவு வேறு! அறிவு என்பது உலககல்வியின் மூலம் அடைந்து விடலாம். ஆனால், அதை வாழ்க்கையில் பயன்படுத்தி நல்நடக்கையில் காண்மிக்க தேவன் தரும் ஞானம் தேவை. அதற்கு ஒருவன் கட்டாயம் தேவனுக்கு பயப்படும் பயத்தை பெற்றிருக்க வேண்டும். பாவி நூறுதரம் பொல்லாப்பைச் செய்து நீடித்து வாழ்ந்தாலும் என்ன? தேவனுக்கு அஞ்சி, அவருக்கு முன்பாக பயந்திருப்பவர்களே நன்றாயிருப்பார்கள் " என்று ஞானி சாலமோன் கண்டறிந்து சொல்கிறார். இளமையிலே தேவனை தேடுவது நல்லது என்று சொன்ன அவர் பிரசங்கி புத்தகத்தின் கடைசியில் முத்தாய்ப்பாகச் சொல்வது. தேவனுக்கு பயந்து; அவர் கற்பனைகளைக் கைக்கொள்; எல்லா மனுஷர் மேலும் விழுந்த கடமை இதுவே; ஒவ்வொரு காரியத்தையும் தேவன் நியாயத்திலே கொண்டு வருவார்: வருவார் பிரச.12:13,14. ஆகவே, நாம் பெற்றிருக்கும் ஆசிர்வாதங்களுக்காக மாத்திரமல்லாமல் நியாயத்தீர்ப்பு கண்டிப்பாக நடக்கபோவதால் நாம் தேவனுக்குப் பயப்பட வேண்டும். 1பேதுரு1:17 பட்சபாதமில்லாமல் அவனவனுடைய

கிரியைகளின்படி நியாயந்தீர்க்கிறவரை நீங்கள் பிதாவாகத் தொழுதுகொண்டு வருகிறபடியால், இங்கே வாழும்வரை பயத்துடனே நடந்துகொள்ளுங்கள் என்றும் 1 பேதுரு 2:17 ல் எல்லாரையும் கனம் பண்ணுங்கள், சகோதரரித்தில் அன்பு கூருங்கள், தேவனுக்குப் பயந்திருங்கள்.. என்றும் பேதுரு அப்போஸ்தலன் சொல்வதைக் கவனியுங்கள். ஒருவன் தேவனுக்கு பயந்தால் தான் மற்றவரை கனம் பண்ணும் பழக்கமும், சகோதரரிடத்தில் அன்பும், அரசாங்கத்தின் அதிகாரங்களுக்குக் கீழ்படியும் குணமும் வரும்!.

தேவபயம் என்பது உலக வழக்கின்படியாகக் கூடாது என்று ஏசா 8:12,13 ல் நாம் வாசிக்கின்றோம். சிலரைப் போல 40 நாள் விரதம், அல்லது குறிப்பிட்ட இடம் புனிதஸ்தலம், வருடந்தோறும் போக வேண்டும் என்பதும், இன்னும் பல சடங்கு சம்பிரதாயங்கள் செய்வதும் தேவனுக்கு பயப்படுவது அல்ல என்று ஏசாயாதீர்க்கன் மூலம் அறிகிறோம். பின்பு எது தேவபயம்? அவருக்கு பயந்து பரிசுத்தமாய் நடப்பதும் பொல்லாப்பான காரியங்களுக்கு விலகி உத்தமமாய் யோபைப் போல வாழ்வதுமே தேவபயம் என்று வேதம் சொல்கிறது. இப்படி தேவனுக்கு பயந்து நடப்பதினால் என்ன நன்மைகள் என்று பார்ப்போம். முதலாவது, அவரோடு இருந்து பின்பற்றும் சிலாக்கியத்தைப் பெறுகிறோம் 1 சாமு 12:14,15 அவருக்குப் பயந்து நடப்பவர்களுக்கு தமது வழியை தேவன் தெரிவிக்கிறார் சங் 25:12 இயேசுவே நமக்கு வழியும் சத்தியமுமாக இருக்கிறார். கேட்டுக்குபோகிற வாசல் விரிவு, அதில் அநேகர் போகிறார்கள். நாம் ஜீவனுக்குப் போகிற இடுக்கமான வாசலாகிய இயேசு ஆண்டவர் வழியில் பின் தொடர்வோம்.

நாம் தேவனுடைய கரங்களின் கிரியைகளாக இருக்கிறோம். அவர் நம்முடைய சிருஷ்டிகராய் இருக்கிறார். நாம் களிமண்ணாகவும் அவர் குயவனாகவும் உள்ளார். எனவே, நாம் அவருக்குப் பயந்து நடப்பது அவசியம். மேலும் நாம் அவருக்கு பயந்து நடப்போமானால் பெரிய நன்மைகள் நமக்காக உண்டுபண்ணி வைத்திருக்கிறார் சங்31:19 நமக்காக ஞாபகப் புஸ்தகம் உள்ளது என்று மல்கியா சொல்லியிருக்கிறார். அதே சமயம் நாம் தேவையில்லாத அதிகாரங்களுக்கு பயப்படத் தேவையில்லை என்று நெகேமியா 5:15 சொல்கிறார். தன்னால் ஒரு பெரிய ஆபத்து கப்பலில் இருந்து அனைவருக்கும் உண்டான போது யோனா பயப்படாமல் அதை மனுஷர் முன் அறிவித்து நான், வானத்தையும், பூமியையும் உண்டாக்கின பரலோகத்தின் தேவனாகிய கர்த்தரிடத்தில்

பயபக்தியுள்ளவன் என்று பெருமையாகச் சொல்லிக்கொண்டது எவ்வளவு அற்புதம்? (யோனா 1:9) முதல் நூற்றாண்டு சபைக்கு அரசாங்கத்தால் பயமுறுத்தல் மற்றும் மரணதண்டனை அச்சுறுத்தல் இருந்தும் பவுல் தைரியமாய் பிரசங்கித்தான். அதினால் சபைகள் நான்கு வித ஆசீர்வாதங்களைப் பெற்றுப் பெருகின! அப் 9:29-31. அவை 1. சமாதானம் 2. பக்திவிருத்தி 3. கர்த்தருக்குப் பயப்படுகிற பயம் 4. பரிசுத்த ஆவியின் ஆறுதல் இப்படிப்பட்ட ஆசீர்வாதங்கள் தேவனுடைய வார்த்தையை பிரசங்கிக்கும்போதே உண்டாகிறது. எனவே தான், சபை கூடுதலை விட்டு விடாதிருங்கள் என்று எச்சரிக்கப்படுகிறோம். இறுதியாக, யாராய் இருந்தாலும் தேவனுக்குப் பயந்திருந்து நீதியை செய்கிறவன் எவனோ அவனே அவருக்கு உகந்தபின் என்று கொர்நேலியு வீட்டில் பேதுரு நிச்சயமாய் அறிந்து கொண்டார் அப் 10:35. ஆகவே, சபை விசுவாசிகள், விசேஷமாய் வாலிபப் பிள்ளைகள் தேவனுக்குப் பயந்து, பொல்லாப்புக்கு விலகி, உத்தமமாய் நடந்து கிறிஸ்துவின் சபைக்கு தூணும் ஆதாரமுமாய் இருக்க எஜமான் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துகிறேன். தேவக்கிருபை நம் அவரோடுங்கூட இருப்பதாக. ஆமென்.

## ஆத்தும வியாதிக்கான வைத்தியம்

- நீங்கள் பொறுமையில்லாதவரானால் மௌனமாக உட்கார்ந்து யோபுவோடு பேசுங்கள்
- நீங்கள் மன உறுதியில்லாதவராக இருந்தால் மோசேயைப் பாருங்கள்
- நீங்கள் கொள்கையற்றவராக இருந்தால் தானியேலை வாசியுங்கள்
- உங்கள் உள்ளத்தில் மகிழச்சியின் கீதம் இல்லாமலிருந்தல், தாமிதை கவனியுங்கள்
- நீங்கள் இழிவாக நடத்தப்படுவதாக உணர்ந்தால் எரேமியாவோடு நேரம் செலவழியுங்கள்
- உங்கள் விசுவாசம் குறைவதாகக் கண்டால், பவுலை அண்டிக் கொள்ளுங்கள்
- மறுமையின் வாழ்வைக் குறித்த எண்ணமில்லாமலிருந்தால் பரம கானானை எட்டிப் பாருங்கள்
- நீங்கள் சுய பரிதாபம் உடையவராக இருந்தால் சிலுவையை நோக்கிப் பாருங்கள்

# திராட்சத் தோட்டமும் அதன் வேலையாட்களும்

சகோ. பாஸ்கர்

**அ**ன்பான வாசகர்களுக்கு ஆண்டவர் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள். ஆண்டவர் இயேசு தமது சபையைக் குறித்து உவமை களாகப் போதித்து உணர்த்தினார். புதிய ஏற்பாட்டில் அவர் போதித்த உவமைகளில் திராட்சத்தோட்டம் பற்றிய உவமை அதிகமாக பயன்படுத்தப் பட்டுள்ளது. ( யோவான் 15 : 1 – 10 திராட்சச் செடி, மத்.20 : 1 திராட்சத் தோட்டம்; 21 – 28 திராட்சத் தோட்டம்; 21 : 33 திராட்சத் தோட்டம்; லூக்கா 13 : 6 திராட்சத் தோட்டம், இவைகள் எல்லாம் கிறிஸ்துவின் சபையைக் குறித்த உவமைகளாகும். இந்த மாதத்தில் தொடர்ந்து திராட்சத் தோட்டமும் அதன் வேலையாட்களும் குறித்துப் படிப்போம்!

I **உவமை ( மத்.20 : 1 - 16 )**

பரலோக ராஜ்யம் வீட்டெஜமானாகிய ஒரு மனுஷனுக்கு ஒப்பாயிருக்கிறது. அவன் தன் திராட்சத் தோட்டத்துக்கு வேலையாட்களை அமர்த்த அதிகாலையிலே புறப்பட்டான். வேலையாட்களுடன் நாளொன்றுக்கு ஒரு பணம் கூலிபேசி அவர்களைத் தன் திராட்சத் தோட்டத்துக்கு அனுப்பினான் மூன்றாம் மணி வேளையிலும் அவன் புறப்பட்டு போய் கடைத் தெருவிலே சும்மா நிற்கிற வேறு சிலரைக் கண்டு நீங்களும் திராட்சத் தோட்டத்துக்குப் போங்கள் நியாயமானபடி உங்களுக்குக் கூலி கொடுப்பேன் என்றான், அவர்களும் போனார்கள். மறுபடியும் ஆறாம், ஒன்பதாம் மணி வேலை யிலும் அவன் போய் சும்மா நிற்கிற வேறு சிலரைக் கண்டு நீங்கள் பகல் முழுவதும் இங்கே சும்மா நிற்கிறதென்ன என்று கேட்டான் அதற்கு அவர் கள் ஒருவரும் எங்களுக்கு வேலையிடவில்லை என்றார்கள். அவன் அவர் களை நோக்கி நீங்களும் திராட்சத் தோட்டத்துக்குப் போங்கள் நியாயமான படி கூலி பெற்றுக்கொள்வீர்கள் என்றான். சாயங்காலத்தில் திராட்சத் தோட் டத்துக்கு எஜமான் தன் காரியகாரனை நோக்கி நீ வேலையாட்களை அழைத்து பிந்தி வந்தவர்கள் தொடங்கி முந்தி வந்தவர்கள் வரைக்கும் அவர் களுக்கு கூலி கொடு என்றான். அப்பொழுது பதினோராம் மணி வேளையில்

வேலையமர்த்தப்பட்டவர்கள் வந்து ஆளுக்கு ஒவ்வொரு பணம் வாங்கினார்கள் முந்தி அமர்த்தப்பட்டவர்கள் வந்து தங்களுக்கு அதிக கூலி கிடைக்கும் என்று எண்ணினார்கள். அவர்களும் ஆளுக்கு ஒவ்வொரு பணம் வாங்கினார்கள். வாங்கிக் கொண்டு வீட்டெஜமானை நோக்கி பிந்தி வந்தவர்களாகிய இவர்கள் ஒரு மணி நேரமாத்திரம் வேலை செய்தார்கள் பகலின் கஷ்டத்தையும் வெயிலின் உஷ்ணத்தையும் சகித்த எங்களுக்கு இவர்களைச் சமமாக்கினீரே என்று முணுமுணுத்தார்கள் அவர்களால் ஒருவனுக்கு அவன் பிரதியுத்தரமாக சிநேகிதனே நான் உனக்கு அநியாயம் செய்யவில்லை. நீ என்னிடத்தில் ஒரு பணத்துக்குச் சம்மதிக்கவில்லையா? உன்னுடையதை நீ வாங்கிக் கொண்டு போ; உனக்குக் கொடுத்தது போல பிந்தி வந்தவனாகிய இவனுக்கும் கொடுப்பது என்னுடைய இஷ்டம். என்னுடையதை என் இஷ்டப்படி செய்ய எனக்கு அதிகாரமில்லையா? நான் தயாளனாயிருக்கிறபடியால் நீ வன்கண்ணனாயிருக்கலாமா என்றான். இவ்விதமாக பிந்தினோர் முந்தினோராயும் முந்தினோர் பிந்தினோராயும் இருப்பார்கள்; அழைக்கப்பட்டவர்கள் அநேகர் தெரிந்துகொள்ளப்பட்டவர்களோ சிலர் என்றார்.

II **வேலையாட்களின் எதிர்பார்ப்பு**

திராட்சத் தோட்டம் என்பது சபை. சபையில் வேலைசெய்யும் ஒவ்வொருவரும் ஏதாவது ஒரு எதிர்பார்ப்புடன் வேலை செய்வார்கள். இந்த உவமையில் வரும் வேலையாட்களும் ஒரு எதிர்பார்ப்புடன் காணப்பட்டனர். ( மத். 20 : 10 ). இயேசு இந்த உவமையைச் சொல்லுவதற்குக் காரணம் அவருடைய சீஷர் பேதுரு என்ன பேசினார் என்றால், நாங்கள் எல்லாவற்றையும் விட்டு உம்மைப் பின்பற்றினோமே எங்களுக்கு என்ன கிடைக்கும்? என்று ஓர் எதிர்பார்ப்பைச் சொன்னார் (மத்.19 : 27). அதற்கு இயேசு மறுஜென்ம காலத்திலே நீங்கள் ஆளுகை செய்வீர்கள் என்றார். ( மத். 19 : 28 ). என் நாமத்தினிமித்தம் எவைகளை விட்டீர்களோ அந்தக் காரியங்கள் கிடைக்கும், தவிர நூறு சதவிகிதம் பெற்று மறுமையில் நித்திய ஜீவனையும் பெறுவான் என்றார் (மத். 19 : 29). அதை விளக்க வேலையாட்களைப் பற்றி போதித்தார் ( மத். 20 : 1 – 16 ). இந்த உவமையை ஆண்டவர் சொல்லுவதற்குக் காரணம் ஊழியத்தில் எவ்விதமான பிரதிபலயையும் எதிர்பார்க்கக் கூடாது. மாறாக, கிருபையைச் சார்ந்தே இருக்கவேண்டும் (எபே.2 : 8 – 10). அநேகர் கூலியை அதாவது உதவித் தொகையை எதிர்பார்த்து ஊழியம் செய்வார்கள். அது கூடாது வேலையாட்களாகிய ஊழியர்கள் அனைவரும் சமமானவர்களே. ஓர் ஊழியர் தன்னை மற்ற ஊழியரோடு ஒப்பிடவோ அல்லது பொறாமைப்படவோ கூடாது. தனக்குக் கொடுக்கப்பட்ட

ஊழியத்தைப் பொறுமையுடன் செய்யவேண்டும் (எபி. 12 : 1). எதிர்பார்ப்பை எல்லாம் தேவனிடம் ஒப்புக்கொடுத்து ஊழியம் செய்யவேண்டும்.

### III **வேலையாட்களின் ஆசீர்வாதம்**

இந்த உவமையில் வரும் வேலையாட்களில் முந்தி அமர்த்தப் பட்டவர்கள் அதிக ஆசீர்வாதம் கிடைக்கும் என் நினைத்து வேலை செய்தனர். ( மத். 20 : 10 ). அதுபோலவே கிறிஸ்துவின் சபையில் நீண்ட காலங்களாக ஊழியம் செய்து வருபவர்கள் அதிக உதவி, மதிப்பு, முதன்மைத் தன்மை கிடைக்கும் என நம்புகின்றனர். ஆனால், ஆண்டவர் எல்லோரையும் சமமாகவே கருதுகிறார் ( மத். 20 : 12 ). ஆசீர்வாதம் கொடுப்பது ஆண்டவர். எனவே அதை அவனுடைய விருப்பத்தின்படிதான் கொடுப்பார். நாம் அவருக்குக் கீழ்ப்படிந்து ஊழியம் செய்ய வேண்டும். மாறாக, முறுமுறுக்கக் கூடாது. அவர் ஒருவருக்கும் அநியாயம் செய்யவில்லை, செய்யவுமாட்டார். என்பதை இந்த உவமையின் மூலமாக விளக்குகிறார். ஆகவே, அனைத்து ஊழியங்களுக்கும் ஒரே விதமான ஆசீர்வாதம் தான் கிடைக்கும்.

●

---

## தேவ வார்த்தை பூரணமானது என்பதற்கான ஏழு காரணங்கள்

- ☞ இது பரிசுத்த ஆவியானவரால் கொடுக்கப்பட்டது.(யோவா 14 : 16)
- ☞ இது நம்மைக் கடைசி நாளில் நியாயந்தீர்ப்பது (யோவா 12 : 48)
- ☞ இது ஜீவனுக்கும், தேவ பக்திக்குமான எல்லாவற்றையும் கொண்டுள்ளது.(II பேது 1 : 3)
- ☞ இது குறைவற்றது (சங். 19 : 7, கலா. 1 : 6 – 9)
- ☞ இத்துடன் கூட்ட முடியாது (யூதா 3, வெளி. 21 : 18, 19)
- ☞ இது கொடுக்கப்பட்ட நோக்கத்தில் முழுமை கொண்டது. இரட்சிப்பை அருளுகிறது (ரோம். 1 : 14 – 16)
- ☞ இது ஒரு போதும் ஒழிந்து போகாது (மத். 5 : 18)







...களது
...தர
...யீடுகள்

Regd. News Paper RNI No. TNTAM/2006/20446
Postal regn. No. Erode/26/2015-2017
Posted at Erode HPO on 20/21 of Every Month.
**Licensed to Post without pre payment**
**No: TN / WR / ERD / 03 / WPP / 2015-2017**




சர்வதேச தரத்தில், தலை சிறந்த பிரசங்கிகளால் எழுதப்பட்ட **சத்தியத்தின் குரல்** என்ற நூல் வேண்டுவோர் எங்களைத் தொடர்பு கொள்ளவும்.
– ஆசிரியர்

தபால் செலவிற்கு பணம் அனுப்பி இந்நூல்களைப் பெற்றுக் கொள்ளலாம்

## திருமறை தியானம்

### தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தமிழன் | TV | திங்கள் | காலை | 7:00 | மணி |
| தமிழன் | TV | வியாழன் | இரவு | 9:30 | மணி |
| தமிழன் | TV | சனி | காலை | 7:15 | மணி |

## வேதாகம அஞ்சல் வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம்

- Advanced Bible Correspondence Course -

பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்க விரும்புபவர்களுக்கு இது ஓர் அரிய வாய்ப்பு.

ஆம், வேதாகமமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு ஏழு பகுதிகளாகப்

Annual Subscriptio...

# திருமறை ஆசா...

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் – 29 இதழ் – 3 மார்ச் 2016